*Journal of Social Review, 09(2), December 2022*
*Department of Social Sciences*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*

# யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பிரதேசத்திற்குரிய கலாசார மரபுரிமைச் சின்னங்கள் : ஓர் ஆய்வு

**Sivaruby Sajitharan**
Department of History University of Jaffna.
Correspondence: sruby@univ.jfn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

*யாழ்ப்பாணத்தின் தென்மராட்சி பிரதேசம் புவியியல் ரீதியாக வடக்கில் தொண்டைமனாறு கடல்நீரேரி, தெற்கில் யாழ்குடா கடல்நீரேரி மற்றும் பூநகரிப் பிரதேசம், மேற்கில் நாவற்குழி, செம்மணிப் பாலம், உப்பாறு கடல்நீரேரி, கிழக்கில் பச்சிலைப்பள்ளி பிரதேசம் ஆகியவற்றை எல்லைகளாக கொண்டுள்ளது. இந்த புவியல் அமைப்பும், கச்சாய், இயற்றாலை போன்ற தொன்மையான துறைமுக நகரங்களும், தென்மராட்சியின் அண்மைப் பகுதிகளான பூநகரி, அம்பனை, குடத்தனை, வல்லிபுரம், நாகர்கோவில், வெற்றிலைக்கேணி, உடுத்துறை போன்றவற்றின் அமைவு போன்றனவெல்லாம் இப்பிரதேசத்தில் தொன்மையான குடியிருப்பின் தோற்றத்திற்கும், அதன் தொடர்ச்சியான வளர்ச்சிக்கும், பண்பாட்டுத் தொடர்புகளுக்குமான சாதகத் தன்மையினை உறுதிப்படுத்துகின்றன. 1980 களில் கலாநிதி. பொ.ரகுபதியால் யாழ்குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கல்வளை (தாவளை - இயற்றலை) – மந்துவில், சங்கிலியன்திடல் - வரணி, பங்குனிப்பிட்டி – வரணி, கச்சாய் போன்ற மையங்கள் உள்ளடங்குகின்றன. இங்கு இடம்பெற்ற ஒருசில ஆய்வுகள் ஊடாக கிடக்கப்பெற்ற புராதனகால, இடைக்கால நாணயங்கள், சுண்ணாம்புக்கல், செங்கல் கட்டிட பாகங்கள், உரோம, சீன மட்பாண்டங்கள், எண்ணிக்கையில் அதிகமான உரோமநாணயங்கள், சங்ககாலத்திற்கு சமகாலத்திற்குரியதான நடுகல் வழிபாட்டு முறைகள் என்பவையெல்லாம் இப்பிரதேசத்தின் தொன்மை வரலாற்றிற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும். பாளி, சிங்கள, மற்றும் யாழ்ப்பாண அரசு தொடர்பாக எழுந்த தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் வரலாற்றுச் சம்பவங்கள், வரலாற்றுக்கதைகள் என்பன தென்மராட்சிப் பிரதேசத்திற்கு உட்பட்ட பலஇடங்களுடன் தொடர்ப்புபடுத்தப்படுவதும், 12ஆம் நூற்றாண்டுக்குரிய சோழச்சாசனங்கள் வடஇலங்கை மீதான சோழப்படையெடுப்பின் போது வெற்றிகொள்ளப்பட்ட இடங்களில் தென்மராட்சிக்குட்பட்ட மட்டுவில் (மட்டுவால்) பிரதேசத்தினைக் குறிப்பிடப்பட்டுள்ளமையும் இப்பிரதேசத்தின் தொன்மைக்கு வலுச்சேர்க்கிறது. இந்நிலையில், தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை முறையாகத் திட்டமிடப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படாமலிருப்பது அதன் தொன்மை வரலாற்றை முழுமையாக வெளிகொணர முடியவில்லையெனலாம். அத்துடன் இப்பிரதேசத்திற்குரிய கலாசார மரபுரிமைச் சின்னங்கள் இன்னும் முழுமையாக ஆவணப்படுத்தி, ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒருசில கலாசார மரபுரிமைச் சின்னங்கள் அடையாளப்படுத்தப்பட்ட போதிலும் அவை பிற்கால மாறுதல்களுக்கு உட்பட்ட நிலையிலும், பல்வேறான காரணங்களால் காலத்துக்கு காலம் மாற்றங்களுக்குள்ளாகி, சிதைவடைந்து வருகின்றன. இவ்வாறானதொரு நிலையில் தென்மராட்சிப் பிரதேசத்திற்குரிய கலாசார மரபுரிமைச் சின்னங்களை முறையாக ஆவணப்படுத்தி, அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதும், அவற்றின் பாதுகாப்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளை முன்மொழிதலும், அதனூடாகப் இப்பிரதேசம் அடையக்கூடிய நன்மைகளை ஆராய்வதனையும் இவ்வாய்வு நோக்கங்கங்களாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வு நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு நேரடி களவாய்வின் ஊடாக முதன்நிலைத்தரவுகள் பெறப்படுவதுடன், ஏனைய இலக்கிய, தொல்லியல் சான்றுகளினையும் இரண்டாம்தர தரவுகளாகக் கொண்டு, அவற்றினை ஒப்பிட்டு ஆராய்வதனூடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படும்.*

**திறவுச் சொற்கள்** - கலாசார மரபுரிமை, மரபுரிமைச் சின்னங்கள், தென்மராட்சி, மரபுரிமைப் பாதுகாப்பு.


ISSN (Print): 2448-9204

**தென்மராட்சியின் வரலாற்றுப் பின்னனி**

இலங்கையின் தொன்மையான தனித்துவமான வரலாற்றுச் சிறப்பு கொண்ட பிராந்தியங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது. தற்போதைய யாழ்ப்பாணமானது தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், அயலில் உள்ள தீவுக் கூட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய நிலப்பகுதியாகும். 15ஆம் நூற்றாண்டளவிலேயே யாழ்ப்பாணம் எனும் பெயர் புழக்கத்திற்கு வந்ததற்கான தொல்லியல், இலக்கியச் சான்றுகள் காணப்படுகின்றன. 15 ஆம் நூண்றாண்டுக்குரிய விஜயநகரப் பேரரசுகால திருமாணிக்குளி கல்வெட்டொன்றிலும், திருப்புகழிலும் 'யாழ்ப்பாணயன் பட்டினம்' எனவும் சந்தேஸ இலக்கியங்களில் 'யாபாபட்டுன' எனவும், போர்த்துக்கேயர்கால, ஒல்லாந்தர்கால ஆவணங்களில் 'இவ்னாபட்டனம், 'ஜவ்னாபட்டினம்' எனவும், பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் 'யாழ்ப்பாணம்' எனவும் இது அழைக்கப்படுகின்றது. எனினும் 15 ஆம் நூற்றாண்டுக்கு முன்னதாகப் இப்பிராந்தியம் நாகதீபம், நாகநாடு, மணிபல்லவம், உத்தரதேசம், வடகர முதலான பெயர்களால் அழைக்கப்பட்டதற்கான பல இலக்கிய, தொல்லியல் மூலகங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வகையான தொல்லியல் ஆதாரங்களில் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு அப்பால் மிக கிட்டிய தூரத்தில் 1936 ஆம் ஆண்டு வல்லிபுரத்தில் கிடைக்கப்பெற்ற பொற்சாசனமும், உடுத்துறையில் கிடைக்கப்பெற்ற தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறித்த நாணயமும் மிகவும் முக்கியம் பெற்றவையாகும். வல்லிபுர பொற்சாசனத்தில் 'நகதிவ' எனவும், கி.பி 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உடுத்துறை நாணயத்தில் 'நாகபூமி' எனவும் அடையாளப்பட்டிருந்தது. இவ்வாதாரங்கள் தென்மராட்சி உள்ளடங்கிய யாழ்ப்பாணப் பிராந்தியம் இப்பெயர் கொண்டு அழைக்கப்படுவதற்கு முன்னர் நாகபூமி, நாகதீபம் என அழைக்கப்பட்டு வந்தமையினையே எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறு நாகதீபம், நாகபூமி என இப்பிராந்தியம் அழைக்கப்பட்டு வந்ததற்கான தொடர்ச்சி நிலையிலான அம்சங்களினை தென்மராட்சி பிரதேசத்திலும் இன்றுவரை அவதானிக்கமுடிகின்றது. குறிப்பாக நாக என்ற பெயரை முன்னொட்டுச் சொற்களாக கொண்ட ஆட்பெயர்கள் மற்றும் நாக வழிபாட்டு மரபுகளின் தொடர்ச்சியான தன்மை என்பன அமைகின்றன. யாழ்ப்பாணம் என்ற சொல் வழக்கில் வருவதற்கு முன்னரே இப்பிரதேசத்தில் உள்ளடங்கிய தென்மராட்சி குறிப்பாக சாவகச்சேரி முக்கிய நிர்வாகப் பிரிவாக விளங்கியிருந்ததனை 'திரிஸிங்ஹளே கடயிம் ஸஹ வித்தி' என்ற நூல் மூலமாக அறிய முடிகின்றது. வடஇலங்கையில் மாகன் ஆட்சிபுரிந்த இடங்களினை சந்திரபானு என்னும் சாவக மன்னன் 1247ம் ஆண்டளவில் கைப்பற்றி, அப்பிரதேசங்களினை ஐந்து மாவட்டங்களாகப் பிரித்து ஆட்சிசெய்திருந்தான். அவை ஐவரிபரட, மாரச்சிரட, பலதடிரட, முகுந்து மல்லியாரட, கணுக்கிணிரட எனப் பெயர் பெற்றன (சிற்றம்பலம், சி. 1993). இங்கு ஐவரிபரட (சாவச்சேரி) என்பது தென்மராட்சியைக் குறித்து நிற்கின்றது.

 ISSN (Print): 2448-9204

இதன் தொடர்ச்சியாகவே யாழ்ப்பாண இராசதானி காலத்திலிருந்து இன்றுவரை தென்மராட்சி தனியொரு நிர்வாகப் பிரிவாக திகழ்ந்து வருவதனை காணமுடிகின்றது.

தென்மராட்சி பிரதேசத்தின் புராதன குடியிருப்புக்களின் தோற்றம், நாகரிக உருவாக்கம் பற்றி ஆராயும் போது, அவை இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முற்பட்ட வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இணைந்ததாக அடையாளப்படுத்த முடியுமெனலாம். பொதுவாக வடஇலங்கையின் நாகரிக உருவாக்கம், புராதன குடியிருப்புக்களின் தோற்றம் என்பன அங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் வரலாற்று உதயகாலமாகிய பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. இதுவரை கிடைக்கப்பெற்ற சான்றாதாரங்களின் அடிப்படையில் பெருங்கற்காலப் பண்பாடானது தென்னிந்தியாவில் கி.மு 1200 தொடக்கம் 300 வரையிலும், இலங்கையில் கி.மு 1000 தொடக்கம் கி.மு 300 வரை நிலவியிருந்தது. பெருங்கற்காலப் பண்பாட்டில் இருப்பிடங்கள், இடுகாடுகள், குளங்கள், வயல்கள் என்பனவே முக்கிய நான்கு கூறுகளாகப் பார்க்கப்படுகின்றன. இவ்முக்கிய நான்கு கூறுகளினையும் தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுவாக காணமுடிவதும் குறிப்பாக குளம், ஈமச்சின்னம் (மயில் அல்லது புறா வடிவ ஈமத்தாழி) வயல், குடியிருப்பு, கிணறு போன்றவற்றின் தொடர்ச்சியான அமைவினை காணமுடிவதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும் (கமலநாதன், 2012).

எனினும் எதிர்கால விரிவான ஆய்வுகள் ஊடாக தான் உறுதியான முடிவுக்கு வரமுடியும். பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களால் தென்மராட்சியில் கண்ணாடிப்பிட்டி, மந்துவில், வரணியிலுள்ள சோழன் மாசேரி, வேலம்பிராய் முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் இவ்விடங்களிளெல்லாம் புராதன காலத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்களின் அடிப்படையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் தொன்மையான பண்பாட்டு உருவாக்கம் ஒன்று ஏற்பட்டிருந்ததென்பதனை அறியமுடிகின்றது. இதன் காலத்தை உறுதிப்படுத்தும் விதமான தொல்லியல் அகழ்வாய்வுகளே அல்லது காலக்கணிப்பு நடவடிக்கையே இங்கு இடம்பெறவில்லையென்பது சுட்டிகாட்டத்தக்க விடயமாகும். எனினும் தென்மராட்சிப் பிரதேசத்தின் அமைவிடமும், அப்பிரதேசங்களில் கிடைக்கப்பட்ட தொல்பொருள் எச்சங்களும் குறிப்பாக பிராமி எழுத்துப் பொறித்த செங்கற்கள், உரோம நாணயங்கள் என்பன இலகுவாக காலத்தை கணிக்க உதவுவதன் பின்னனியில் தென்மராட்சியின் புராதன குடியிருப்பு மற்றும் பண்பாட்டு உருவாக்கம் என்பனவற்றை பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையிலான அம்சங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்வது பொருத்தமாகத் தெரிகின்றது.


ISSN (Print): 2448-9204

பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையிலான பண்பாட்டம்சங்களின் தொடர்ச்சியான தன்மையினை இற்றைவரை இனங்காணமுடிவது சிறப்பான அம்சமாகும். குறிப்பாக தென்மராட்சிப் பிரதேச மக்களிடையே இன்றும் நிலவுகின்ற கிரியை முறைகள், நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் சமூகப்பண்பாடு, பழக்கவழக்கங்கள் என்பவற்றின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றின் தொடக்கமாக பெருங்கற்காலப் பண்பாடே விளங்குகின்றது. இவற்றை பின்வரும் உதாரணங்கள் மூலம் காணலாம். இறந்தவரது ஈமச்சடங்குகள், கிரியை முறைகள், படையல் முறைகள் என்பவற்றின் ஊடான தொடர்ச்சித்தன்மை, இறந்தவர் வழிபாடு, நினைவுக்கற்கள் அமைக்கும் மரபு, நடுகல் வழிபாடு, ஆவுரஞ்சி, மடம், சுமைதாங்கி என்பவற்றின் அமைப்பு, ஆகமம்சார கிராமிய தெய்வ வழிபாடுகள், வழிபாட்டம்சங்கள் என்பவற்றுடன் பெருங்கற்கால மக்களின் கருத்தினை தாங்கி நிற்கின்ற எழுத்து வடிமான குறியீட்டு மரபுகளின் தொடர்ச்சி நிலையிலான வளர்ச்சியினையும் இன்றுவரை காணக்கூடியாதவுள்ளது. குறிப்பாக கிராமப்புறங்களில் இன்றும் ஒவ்வெரு குடும்பங்களுக்குரிய ஆடைகளை அடையாளம் காணும் பொருட்டு சலவைத் தொழிலாளர்கள் மத்தியில் நிலவுகின்ற குறியீடுகள் மற்றும் மாடுகளில் காணப்படுகின்ற குறியீடுகளிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு குறியீடுகளின் தொடர்ச்சியினை இனங்காண முடிகின்றது. மேலும் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தோன்றிய சங்ககாலப் பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாகிய நடுகல் வழிபாட்டு மரபுகள் மற்றும் கிராமிய காவற்தெய்வ வழிபாட்டம்சங்களினை பிராமி எழுத்து வடிவத்துடன் கூடியதாக மந்துவில் இயற்றாலைப் பகுதியில் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களால் அடையாளப்படுத்தியிருந்தமை கவனத்திற்குரிய விடயமாகும் (புஸ்பரட்ணம், 2004). இவ்வாறான வரலாற்றுதயகாலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையிலான பண்பாட்டு அம்சங்கள் இப்பிரதேசத்திற்குரிய தொன்மையின் கருவூலங்களாகும். அத்துடன் தொன்மையான வாழ்வியல் பண்பாட்டு கூறுகளை இன்றுவரை பேணிப்பாதுகாத்து வருகின்ற பிரதேசமாகவும் தென்மராட்சி விளங்குகின்றது.

புராதனகாலம் தொட்டு தென்மராட்சிப் பிரதேசம் தொன்மையான பாரம்பரியம் மிக்க பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டிருப்பதுடன் அதன் தொடர்ச்சியாகவே சோழர்கால இலங்கையிலும் இப்பிரதேசம் முக்கியப்படுத்தப்பட்டிருந்ததற்கான ஆதாரங்களைக் காணமுடிகின்றது. இப்பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற சோழர்கால நாணயங்களுடன், இப்பிரதேசத்திற்கு மிககிட்டிய தூரத்தில் அமைந்துள்ளதும், சோழர்காலத்தில் அதிமுக்கியம் பெற்ற தொல்லியல் மையமுமான பூநகரியினூடான தொடர்புகளும் இப்பிரதேசத்தின் சோழர்கால பண்பாட்டு அம்சங்கள் செல்வாக்குப்பெற ஏதுவாக அமைந்திருந்ததெனலாம். உதாரணமாக மட்டுவில் கல்வத்தை சிவன் கோயில், சாவகச்சேரி வாரிவனேஸ்வரர் ஆலயங்களின் வரலாற்றுத் தொன்மையினை சோழர்காலத்துடன் தொடர்புபடுத்த இடமுண்டு. இவற்றுக்கு மேலதிகமாக 12ஆம்


ISSN (Print): 2448-9204

நூற்றாண்டுக்குரிய திருவாலங்காட்டுக் கல்வெட்டுக்கள், பல்லவராஜன் பேட்டைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் செய்திகள் முக்கியம் பெற்றவையாகும். இக்கல்வெட்டுச் செய்திகளின் படி 2ம் இராஜாதிராஜ சோழனின் வடஇலங்கை மீதான படையெடுப்பின் போது, அக்கால கட்டத்தில் முக்கியம் பெற்ற மட்டுவில் (மட்டுவால்) என்னும் இடத்தில் நிலை கொண்ட யானைகளையும், படைவீரர்களையும் சிறைப்பிடித்து சோழப்படைகள் தமிழகம் கொண்டு சென்றதாக குறிப்பிடுகின்றன (Sathasivapandarathar, 1954). இங்கு மட்டுவில் எதுவென்பதில் பூநகரிப்பிரதேசத்தின் மட்டுவிலா? அல்லது தென்மராட்சியின் மட்டுவிலா? என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் வரலாற்று ஆசிரியர்கள் தமது ஆய்வுகளில் தென்மராட்சியின் கல்வளை - இயற்றாலை பகுதிக்கு மிக கிட்டிய தூரத்தில் அமைந்துள்ள மட்டுவிலினையே இக்கல்வெட்டுக்கள் குறித்து நிற்பதாக சுட்டுகின்றனர் *(Paranavitana, 1960; Nilakanta Satri, 1958).* மேலும் சோழ வரலாற்றுடன் தொடர்புடைய சோழர் புலம், சோழன் மாசேரிவயல், வங்காளவடி, சந்திரபுரம், வேளையார்புலம், விக்கிரமாகுளம் இடப்பெயர்கள் பலவும் தென்மராட்சிப் பிரதேசத்தில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வடஇலங்கையில் சாவக மன்னன் சந்திரபானுவின் ஆட்சி கி.பி 13 ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்டதெனவும் அதன் தொடர்பாகவே சாவகச்சேரி, சாவக்கோட்டை, சாவசன் சீமா என்ற இடப்பெயர்கள் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. யாழ்ப்பாண இராசதானி மன்னர்களாலேயே சாவகர் தென்மராட்சியில் குடியேற்றப்பட்டனர் எனவும், சாவகச்சேரியில் சாவகர் தொடர்பு பற்றி யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடும் பொழுது ‘குலோத்துங்க சிங்கையாரியன் 13ஆம் நூற்றாண்டில் யாப்பகூவாவை அழித்தபொழுது சிறைப்பிடிக்கப்பட்ட யாவர்களே இங்கு வாழ்ந்தனர் எனவும் இவர்களை சங்கிலி மன்னன் சவாங்கோட்டை, சாவகச்சேரியிலிருந்து தூரத்தினான் எனக் குறிப்பிடுகின்றது.

வடஇலங்கையில் இதுவரை கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட சுதந்திர தமிழரசு கி.பி 13ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு தோற்றம் பெற்றிருந்தது. இவ்வரசே கி.பி 1619 இல் போர்த்துக்கேயாரால் நல்லூர் கைப்பற்றப்படும் வரை வடஇலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவ்நல்லூர் இராசதானிக் காலத்தில் தென்மராட்சிப் பிரதேசம் முக்கிய நிர்வாகப் பிரிவாகவும், துறைமுக நகரமாக விளங்கியிருந்தமை பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. தென்மராட்சியின் புராதன வரலாற்று மையங்களான மந்துவில், வரணி, கச்சாய், சாவகச்சேரி போன்ற இடங்களுடன் நல்லூர் இராசதானி மன்னர்கள் கொண்டிருந்த தொடர்புகளும் யாழ்ப்பாண மன்னர்கள் கால இலக்கியங்களிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தென்மராட்சிப் பிரதேசம் யாழ்ப்பாண அரசு கால பொருளதாரத்தில் ஏனைய பிரதேசங்களினைவிட முதன்மை பெற்றிருந்ததுடன் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்திலும் முன்னனியில் திகழ்ந்திருந்தது. வையாபாடல்,


ISSN (Print): 2448-9204

கைலாயமாலை போன்ற நூல்கள் யாழ்ப்பாண அரசு காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட தமிழ்க் குடிகளில் ஒரு பிரிவினர் தென்மராட்சிப் பிரதேசத்தின் முகமாலை, கோகிலாக்கண்டி, கச்சாய் ஆகிய இடங்களில் குடியேற்ற பட்டதாகவும், அவ்விடங்களில் நிர்வாக அதிகாரிகளை நியமித்ததனையும் குறிப்பிடுகின்றன. அத்துடன் வரணியில் சங்கிலியாதிடல், சங்கிலியாத் தோப்பு, சங்கிலியா வளவு போன்ற இடப்பெயர்கள் யாழ்ப்பாண இராசதானிகால இறுதி மன்னான சங்கிலியனின் வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்படுவதன் பின்னனியிலேயே ஏற்பட்டதென இற்றைவரை மக்களிடையே வரலாற்றுக் கதைகள் செல்வாக்குப் பெறுகின்றன. இலங்கையில் இஸ்லாமியரது குடியிருப்பினை கி.பி 13 ஆம் நூற்றாண்டின் பின்னரான காலப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக காணமுடிகின்றது. இந்தவகையில் யாழ்ப்பாணவைபவமாலைக் குறிப்பின் படி, யாழ்ப்பாணத்துடன் வாணிப, கலாச்சார தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட இஸ்லாமியர் முதலில் குடியேறிய இடங்களாக தென்மராட்சியின் முகமாலை, உசன், கச்சாய், சாவகச்சேரி முதலிய இடங்களினைக் குறிப்பிடுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்திலும் தென்மராட்சிப் பிரதேசம் முக்கிய நிர்வாக மையங்களில் ஒன்றாக விளங்கியிருந்ததனை ஐரோப்பியரது ஆவணங்களும், யாழ்ப்பாண அரசுகால தமிழ் இலக்கியங்களும் புலப்படுத்துகின்றன. போர்த்துக்கேயருக்கு எதிராக யாழ்ப்பாண மன்னர்கள் போரிட்ட காலத்தில் அப்படை வீரர்களின் காவல் மையமாகவும், யுத்த தளபாடங்களைப் பாதுகாக்கும் இடமாகவும் தென்மராட்சிப் பிரதேசத்தில் மந்துவில், மட்டுவில் பகுதிகள் விளங்கியதனை போர்த்துக்கேய மதகுருவும், வரலாற்று ஆசிரியருமான குவைரோஸ் பாதிரியார் குறிப்பிடுகின்றார். மேலும் போர்த்துக்கேய ஆவணங்களில் யாழ்ப்பாணம் நோக்கிப் போர்த்துக்கேயப் படைகள் முன்னேறிய போது, அச்சுவேலிக்கும் புத்தூருக்கும் இடையில் யாழ்ப்பாண மன்னர்களுடன் இடம்பெற்ற போரைத் தொடர்ந்து போர்த்துக்கேயப் படைகளின் ஒரு பிரிவினர் கிழக்கு நோக்கி தென்மராட்சிக்குச் சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக யாழ்ப்பாண மன்னர்கால தமிழிலக்கியங்களில் போர்த்துக்கேயப் படைகளிடம் தோல்வியடைந்த சங்கிலி மன்னன் கோப்பாயிற்கு தப்பிச் சென்று அங்கிருந்து தொண்டமானாறு கடல் நீரேரியூடாக மந்துவில் சென்றதாகக் குறிப்பிடுகின்றது. இன்றும் மந்துவிலில் காணப்படும் கோட்டை சங்கிலியன் கோட்டையென்றும், இப்பிரதேசத்தினை அண்டிய இடங்கள் பல சங்கிலிய மன்னனுடன் தொடர்புடைய இடப்பெயர்களாகவும் காணப்படுகின்றன. போர்த்துக்கேய ஆட்சியின் முடிவில் 1658 இல் முதன் முறையாக யாழ்ப்பாணத்து மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்றது. அதில் 128 கிராமங்களில் 120000 மக்கள் வாழ்ந்து வந்ததாகக் கூறும் போர்த்துக்கேய ஆவணங்களில் 52 கிராமங்கள் தென்மராட்சியையும் அதைச் சூழவுள்ள பிராந்தியத்திலும் காணப்பட்டதாகக் கூறுகின்றது. இக்கணக்கு யாழ்ப்பாணத்தின் அன்றைய மொத்த மக்கள் தொகையில் நாற்பது வீத மக்கள்


ISSN (Print): 2448-9204

தென்மராட்சிப் பிரதேசத்தில் வாழ்ந்ததைக் காட்டுகின்றது (புஸ்பரட்ணம், 2012). இவ்வாறாக தொன்மையான காலம் தொட்டு ஐரோப்பியர் காலம் வரையிலான தென்மராட்சியின் தொடர்ச்சியான வரலாறு இலக்கியங்களாலும், இதுவரை கிடைக்கப் பெற்ற தொல்லியல் சான்றுகளின் அடிப்படையிலும் கட்டியெழுப்ப முடிகின்றதெனிலும் எதிர்கால விரிவான தொல்லியல் ஆய்வுகள் மூலமாகவே மேலதிக தரவுகளைப் பெறமுடியும்.

## தென்மராட்சிப் பிரதேசமும் வரலாற்றுக் கதைகளும்

தென்மராட்சிப் பிரதேசத்துடன் தொடர்ப்புபடுத்தப்படும் கீழ்வரும் வரலாற்றுக் கதைகள் பெரிதும் யாழ்ப்பாண இராசதானிகால தமிழ் இலக்கியங்களினை அடிப்படையாகக் கொண்டவை.

1. கருணாகரத் தொண்டைமானுடைய உப்பு வணிகம் தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்டமை – உக்கிரசிங்க மன்னனிடம் கருணாகரத் தொண்டைமான் உடுப்பிட்டியில் உள்ள உப்பைக் கேட்டதாகவும், இவ்உப்பை கொண்டு செல்வதற்காகவே தெண்டைமானாறு வெட்டப்பட்டதாகவும் உள்ள வரலாற்றுக் கதை.

2. யாழ்ப்பாண இராசதானி மன்னனாகிய பரராச சேகரனை சோழமன்னன் சிறையெடுத்த போது, அம்மன்னனை மீட்ட பரநிருசிங்கம் என்ற வீரனுக்கு ஏழு ஊர்களை அம்மன்னன் பரிசளித்திருந்தான். அந்த ஏழு ஊர்களில் தென்மராட்சிப் பிரதேசத்தின் கச்சாயும் உள்ளடங்கியிருந்ததாகவும் உள்ள வரலாற்றுக்கதை.

3. யாழ்ப்பாணத்தில் கி.பி 1248 அளவில் ஆட்சிபுரிந்த கலிங்க வம்சத்தினரின் முதல் மன்னனாகிய விஜயகாலிங்க சூரியன் தென்னிந்தியாவிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் குடியேற்றியதாகவும், யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலி, புலோலி, இணுவில், தென்னமராட்சியில் கோயிலாக் கண்டி என பல இடங்களில் இவ்வாறான குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளதோடு, தென்னிந்தியாவின் புல்லூரைச் சேர்ந்த தேவராயேந்திரன் கோயிலக்கண்டியில் தனது அடிமைக் குடிகளுடன் குடியேறியிருந்தான்.

4. சாவக மன்னன் சந்திரபானு வடஇலங்கை மீது படையெடுத்து இங்கு ஆட்சிபுரிந்த கலிங்க வம்சத்தினரது ஆட்சியினைக் கைப்பற்றிக் கொண்டான். சாவக மன்னனோடு வந்தவர்கள் குடியேறிய இடங்களே சாவகச்சேரி, சாவக்கோட்டை, சாவகன்சீமா என அழைக்கப்பட்டலாயிற்று.

5. யாழ்ப்பாண இராசதானியை கைப்பற்றுவதற்காக ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் செண்பகப்பெருமாளினை (சப்புமல்குமரய) கி.பி 1450 அளவில் பெரும்படையுடன் வடஇலங்கை அனுப்பிய போது, அவனுக்கும் யாழ்ப்பாண இராசதானி மன்னனுக்கும் இடையே இடம்பெற்ற முதலாவது போர் சாவகன் கோட்டையில் (சாவகச்சேரி) இடம்பெற்றமை.

 ISSN (Print): 2448-9204

**தென்மாராட்சியின் தொல்லியல் மரபுரிமை சின்னங்கள்**

மரபுரிமை என்பது ஒரு குழு அல்லது சமூகத்ததால் கடந்த காலத்தில் பின்பற்றப்பட்டதும் நிகழ்காலத்தில் தொடர்ந்து பராமரிக்கப்படுவதும் எதிர்காலத்தில் அடுத்த சந்ததியினரிடம் பாதுகாத்துக் கொடுக்கப்பட வேண்டியதுமான விலைமதிக்க முடியாத சொத்துக்களாகும். இவை உலகின் ஒவ்வொரு நாட்டினதும் அல்லது பிரதேசத்தினதும் வரலாற்றினை பிரதிபலிப்பவையாகவும் திருப்பிபெற முடியாதான பெறுமதியைக் கொண்டவையாகும். இதில் தொல்லியல் மரபுரிமை என்பது பல்லினப் பண்பாடு கொண்ட மக்கள் வாழும் நாட்டில் ஒவ்வொரு இன மக்களினதும் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்திக் காட்டும் நம்பகரமான ஆதாரமாகப் பார்க்கப்படுகின்றது. இலங்கை தொல்பொருள் திருத்த சட்டத்தின் (Antiquities amendment Act No.24 of 1988) பிரகாரம் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் வரலாற்றுப் பெறுமதியுயை காணிகள், கட்டடங்கள், மரங்கள் போன்றயாவற்றையும் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தி வருகின்றது.

இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு குறையாத நீண்ட தொடர்ச்சியான வரலாறு கொண்ட பிரதேசமான யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பிரிவில் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களை அடையாளப்படுத்தல், ஆவணப்படுத்தல் என்பது பாரிய சவாலான விடயமாகவுள்ளது. ஏனெனில் இங்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவிற்கு தொன்மையான கட்டிடங்களையே, கட்டிட எச்சங்களினையே அடையாளங் காணமுடியாதுள்ளமையாகும். எனினும் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகள், தமிழ், சிங்கள இலக்கிய குறிப்புக்கள், கல்வெட்டாதாரங்கள், நாணயங்கள், மட்பாண்டங்கள் எதிர்பாராத விதமாக கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்கள் என்பனவெல்லாம் இப்பிரதேசத்தின் தொன்மையான வரலாற்றிற்கு சாட்சியமாகவுள்ளன.

இந்தவகையில் தென்மராட்சிப் பிரதேசம் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றுச் சிறப்பு கொண்டதொரு பிராந்தியமாக காணப்படினும், அதன் தொன்மை வரலாற்றுக்கு சாட்சியமாகின்ற தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் மிகக்குறைவாக உள்ளமைக்கு பின்வருவன காரணங்களாக அமைகின்றன. யாழ்ப்பாணப் பிரதேசமானது கரையோரம் சார்ந்த பிரதேசமாக இருப்பதனால் போர்த்துக்கேய, ஒல்லாந்தர்கால நடவடிக்கையினுள் முழுமையாக உட்பட்ட பிரதேசமாக அமைந்திருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்கள் பல அழிக்கப்பட்டே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால தேவாலயங்கள், கோட்டைகள், நிர்வாக மையங்கள் அமைக்கப்பட்டிருந்ததனை ஐரோப்பியரால் அமைக்கப்பட்ட யாழ் கோட்டைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் எச்சங்கள், இந்துக்கட்டிடக் கலைப்பாகங்கள், சுடுமண் உருவங்கள், கல்வெட்டுக்கள் என்பனவும், தற்போதைய சாவகச்சேரி நகரப் பகுதிகளிலும், சாவகச்சேரி


ISSN (Print): 2448-9204

நீதிமன்ற வளாகத்தினுள் எதிர்பாரத விதமாக வெளிகொணரப்பட்ட இந்துக் கோயில் கட்டிடப் பாகங்கள், தெய்வ விக்கிரகங்கள், சிற்பங்கள் போன்றனவும் உறுதிப்படுத்துகின்றன. மக்களிடையே தொல்லியல் சின்னங்களைப் பாதுகாத்தல், அடையாளப்படுத்தல் தொடர்பிலான அக்கறை அல்லது தொல்லியல் சின்னங்கள் பற்றிய போதிய விழிப்புணர்வையும் மரபுரிமைச் சின்னங்கள் பேணிப்பாதுகாக்கப்படாமைக்கு முக்கிய காரணமாக அமைந்தது. கல்வளைக் கோட்டைப் பகுதியின் சிதைவும் அழிவும் இதற்கு மிகச்சிறந்த உதாரணமாகும். கடந்தகால உள்நாட்டு யுத்தநிலையும் தொல்லியல் மரபுரிமைகளின் அழிவிற்கும், சிதைவிற்கும் காரணமாக அமைந்திருந்தது. இதனால் அவ்அவ்போது கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் எச்சங்கள் தற்போது எங்கேயிருக்கின்றது எனத்தெரியாமல் போயிருப்பதும் குறிப்பாக வரணிப் பகுதியில் 1972 ஆம் ஆண்டில் ஈமத்தாழியென்று கண்டுபிடிக்கப்பட்டதற்கு உறுதியான தகவல்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்ற போதிலும் அது பற்றிய மேலதிக தகவல்களைப் பெற முடியாமல் போயுள்ளமையும் அத்துடன் யுத்தசூழ்நிலை ஒன்றினை எதிர்கொள்கின்ற மக்களின் மனோபாவத்தில் மரபுரிமை பாதுகாப்பு பற்றிய சிந்தனைகளை எதிர்பார்க்க முடியாதென்பதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

மரபுரிமைச் சின்னங்கள் அமையப் பெற்ற காணிகளிலும் அவற்றுக்கு அண்மையிலும் குடியிருப்புக்கள், விவாசாயம், புதிய கட்டிடங்கள் அமைத்தல், நகரமயமாக்கல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இச்செயற்பாடுகள் தொன்மையான மரபுரிமைச் சின்னங்களின் அழிவிற்கும், எதிர்கால ஆய்வுகளுக்கும் தடையாக அமைந்துவிடுகின்றது. உலகமயமாக்கல், பின்நவீனத்துவக் கருதுகோள்களின் தாக்கம், பல்லினப் பண்பாட்டுத் தன்மை என்பவையெல்லாம் வளர்முகநாடுகளின் தொன்மையான மரபுரிமைகள் தமது தனித்துவத்தை இழப்பதற்கு காரணமாக உள்ளன. காலமாற்றத்தின் பொருளாதார, தொழில்நுட்ப மாற்றங்களுக்கு உட்பட்டு மரபுரிமைகள் தமது தனித்துவத்தை இழத்தலென்பது வளர்முக நாடுகளுக்குள்ள பொதுவான பிரச்சனையாகும். அந்தவகையில் தென்மராட்சிப் பிரதேசத்தின் தொன்மையான மரபுரிமைகள் பல சமகால மாற்றங்களுக்குட்படுவதனை அவதானிக்கமுடிகின்றது. குறிப்பாக ஆகமம் சாராத கிராமிய வழிபாட்டிடங்கள் பல தமது தனித்துவத்தை இழந்து ஆகமம் சார்ந்த கோயில்களாக மாற்றம் பெறுதலும், தொன்மையான வரலாற்றுப் பெறுமதி கொண்டதாக அடையாளப்படுத்தப்பட்ட கல்வத்தை சிவன்கோயில், மிருசுவில் சென் நிக்கலஸ் தேவாலயம் போன்றவை காலமாற்றத்தின் தொழினுட்பங்களை உள்வாங்கி மீள் உருவாக்கப்படுவதனைக் குறிப்பிடலாம். தொல்லியல் திணைக்களத்தினால் 2012 இற்கு முன்னர் தென்மராட்சிப்பிரதேசத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரேயொரு மரபுரிமைச்சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட மிருசுவில் நிக்கலஸ் தேவாலயம் அமைந்திருந்தாலும் அதன் புனரமைப்பு பணிகளின் பொருட்டு தொன்மையான


ISSN (Print): 2448-9204

கட்டிடப்பாகங்கள் அகற்றப்பட்டும், அவற்றில் பல தென்னிலங்கை வணிகர்களுக்கு விற்பனை செய்யப்பட்டும் இருந்தது. இவ்விவகாரம் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கையின் பிரகாரம் நீதிமன்றம்வரை சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். தென்மராட்சிப் பிரதேசத்தின் வீதி அகலிப்பு நடவடிக்கைகள் காரணமாகவும் வீதியோரங்களில் காணப்படும் மரபுரிமைச் சின்னங்கள் பல அழிவடைந்து கொண்டிருக்கின்றமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்க விடயமாகும். குறிப்பாக அண்மையில் வீதி புனரமைப்பு பணிகளின் போது வரணி – சுமைதாங்கி ஒன்று அகற்றப்பட்டிருந்தமையும், அதன் பொருட்டு தொல்லியல் திணைக்களத்தினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையையும் உதாரணமாக குறிப்பிட முடியும். மரபுரிமை பிரதேசம்சார் புதிய அபிவிருத்தி திட்டங்கள் (குறிப்பாக விடுதிகள், ஹோட்டல்கள், கடைகள், அரச, தனியார் கட்டங்கள்) அபிவிருத்தி என்ற பெயரில் நவீனமயப்படுத்தப்பட்டு பழமையான கட்டிடப் பாகங்கள், கலைப்பொருட்கள், பாவனைப் பொருட்கள் என்பன வணிகர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதனையும் காணமுடிகின்றது. இவ்வாறாக தொல்லியல் எச்சங்கள் பலவும் விற்பனைப் பொருளாகப் பார்க்கப்பட்டு வருதல், போதிய விழிப்புணர்வின்மை, அறியாமை, அத்துமீறிய செயற்பாடுகள், இயற்கை காரணிகள் போன்ற காரணங்களால் தென்மராட்சிப் பிரதேச தொல்லியல் மரபுரிமைகளை அடையாளங் காணமுடியாதுள்ள நிலையில் அப்பிரதேசம் தனது பண்பாட்டு அடையாளத்தினை பெரிதும் இழந்துள்ளதென்றே கூறலாம்.

இவ்வாறாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் தொன்மையான தொடர்ச்சியான வரலாற்றுச் சிறப்புடைய பிராந்தியங்களில் ஒன்றாக விளங்கிய தென்மராட்சிப் பிரதேசத்தின் மரபுரிமைச் சின்னங்கள் பல காரணிகளால் காலத்துக்கு காலம் அழிவிற்கும், சிதைவிற்கும் உட்பட்டு வருகின்றது. இவற்றிலிருந்து தப்பி எஞ்சியிருக்கும் கலாசார மரபுரிமைகளினை தொல்லியல் ரீதியாக முக்கியம் பெற்ற தளங்கள், மையங்கள், வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்கள், புராதன காலத்தில் மக்கள் நடமாட்டத்திற்குரிய, ஒன்று கூடும் இடங்களில் அமையப்பெற்ற சுமைதாங்கிக் கற்கள், ஆவுரஞ்சிக் கற்கள், மடங்கள், கோட்டைகள்?, ஐரோப்பியர்கால மரபுரிமைச் சின்னங்கள் என அடையாளப்படுத்த முடியும். மேலும் இவற்றுடன் நாணயங்கள், கட்டிடப் பாகங்கள், மட்பாண்டங்கள், சிற்பங்கள், விக்கிரகங்கள் போன்ற தொல்லியல் எச்சங்களினையும் (Artifacts) குறிப்பிட்டு சொல்லமுடியும்.

### 1. தொல்லியல் தளங்கள் அல்லது தொல்லியல் அகழ்வாய்வுக்கு முன்மொழியப்படும் மையங்கள் :

தென்மராட்சிப் பிரதேசத்தின் தொன்மையை வெளிப்படுத்தியிருப்பதில் சுவாமி ஞானப்பிரகாசர், கலாநிதி. பொ. ரகுபதி, பேராசிரியர் புஸ்பரட்ணம் போன்ற வரலாற்று, தொல்லியல் அறிஞர்களின் ஆய்வுகளுக்கே முக்கிய பங்குண்டு. இவ்வாய்வுகள் பெரிதும் தொல்லியல் மேலாய்வு முறையினைச் சேர்ந்ததாகும். இத்தொல்லியல் மேலாய்வுகளின்


ISSN (Print): 2448-9204

போது கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்களின் அடிப்படையில் பின்வரும் மையங்கள் தொன்மைச் சிறப்புடையதாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும், திட்டமிடப்பட்ட வகையில் தொல்லியல் அகழ்வாய்வுகள் இடம்பெறும் சர்ந்தப்பத்தில் தான் தென்மராட்சியின் வரலாறு முழுமையாக வெளிப்படுத்தப்படும். இவ்வாறு தொல்லியல் அகழ்வாய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய மையங்களாக கல்வளைக் கோட்டை, சங்கிலியன்திடல், பங்குனிப்பிட்டி, வேரக்காடு, கச்சாய் துறைமுகம் மற்றும் சாவகச்சேரி என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

### 1.1 கல்வளைக்கோட்டை

இப்பிரதேசமானது சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் கீழ் J/344: தாவளை - இயற்றாலை கிராமசேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. தற்போதைய நிலையில் உப்பாற்றுக் குடா ஏரி பகுதியினை அண்டியவாறு கோட்டை ஒன்று அமைந்திருந்தததற்கான செங்கற்கள், பொழிகற்களிலான சிதைவுகள், பொழிகல்லிலான பழைமையான கிணற்றின் சிதைவுகள், அத்திவாரப் பகுதிகள் போன்றவற்றை பல ஏக்கர் பரப்பில் அடையாளங்காண முடிகின்றதுடன் அதன் அயல் பகுதிகளில் ஆறு பழமையான ஆலயங்களினையும் (கிழக்கு – கோட்டைவாசற் பிள்ளையார், தெற்கு – ஐயனார், அண்ணமார், வேறும் சில கிராமியத் தெய்வங்கள், வடகிழக்கு – வீரபத்திரர், மத்தி – நடுகல் மரபை ஒத்த 14 கிராமியத் தெய்வங்கள்) காணமுடிகின்றது. கோட்டைக்கான செங்கற்கள், பொழிகற்கள் வீதி அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தமையும், இவ்சிதைவுகள் அடையாளப்படுதப்பட்ட இடங்கள் பெரும்பாலும் விவசாய நிலமாகவும் ஒரு பகுதி பற்றைக் காடாகவும் காட்சியளிக்கின்றது (ஆய்வாளர்: களஆய்வு, 2021).

யாழ்ப்பாணக் குடாநாட்டின் புராதன தொல்லியல் மையங்களில் ஒன்றாக தாவளை - இயற்றலைப் பகுதி காணப்படுகின்றது. அத்துடன் இத்தொல்லியல் தளத்தின் அமைவிடமும், அண்மையில் கடல்நீரேரி மற்றும் சதுப்பு நிலங்களைக் கொண்டிருப்பதும், குடாநாட்டின் ஏனைய முக்கிய தொல்லியல் மையங்களான வல்லிபுரம், குடத்தனை, வெற்றிலைக்கேணி, நாகர்கோயில் என்பனவற்றின் கிட்டிய தூரத்தில் வடக்கே அமைந்திருப்பதும், மேற்கே தொண்டைமானாறு கடல்நீரேரியும், வடக்கே பெருங்கடலுடன் தொடர்புடைய பரவைக் கடலுடனும் தொடர்பு கொள்ளக் கூடிய இடத்தில் அமைந்திருப்பதும் புராதன கடல்வழித் தொடர்பின் சாதகச் தன்மையை வழங்கியிருந்தது. இச்சாதகத் தன்மை காரணமாகவே புராதன குடியிருப்புக்கள் தோற்றம் பெற்ற மையமாகவும், கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட முதல் ஆண்டுகளிலேயே உரோமரது வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்ட புராதன வாணிப மையமாக விளங்கியிருக்க வேண்டும்.

இம்மையத்தின் கடல்வழி, தரைவழிப் போக்குவரத்துக்கான சாதகச் தன்மையின் அடிப்படையில் யாழ்ப்பாண மன்னர்கால வரலாற்று மூலங்களில் தென்மராட்சியில் முக்கியம் பெற்ற மையமாகவும் விளங்கியிருப்பதனாலும் இப்பகுதியில் தொன்மையானதொரு கோட்டை அமைந்திருக்கும் என்பதில் வியப்பேதுமில்லை. சுவாமி ஞானப்பிரகாசர் 1918 இல் தான் எழுதிய வரலாற்று நூலில் இப்பகுதியிலிருந்த கட்டிடங்களிலிருந்து செங்கற்கள், முருகைக்கற்கள் என்பன வண்டி வண்டியாக ஏற்றிச்


ISSN (Print): 2448-9204

செல்லப்பட்டதை தான் நேரில் கண்டதாக குறிப்பிடுகின்றார். கலாநிதி ரகுபதி 1980களின் யாழ்ப்பாணக்குடாநாட்டின் புராதன குடியிருப்புக்கள் பற்றிய தனது நூலில் 20 ஏக்கர் பரப்பளவில் சுண்ணாம்புக் கற்பாறைகளினையும், ஒருபகுதி செங்கற்களை கொண்ட கட்டிட அத்திவாரப் பகுதி இருந்ததாகவும், அதன் உள்ளே பழமையான கிணறு ஒன்றும், கிராமிய வழிபாட்டுத் தெய்வங்களும், வெளிப்பகுதியில் கல்வளைப் பிள்ளையார் ஆலயம் இருந்ததாகவும் குறிப்பிட்டார். மேலும் அவர் கி.பி முதலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 4ஆம் நூற்றாண்டு காலப்பகுதிக்குரிய 16 உரோம நாணயங்கள், மட்பாண்டங்கள், செங்கட்டிகள் போன்றன அப்பகுதியிலிருந்து கிடைத்தமை பற்றியும் குறிப்பிட்டிருந்தார் (Ragupathy, 1987).

இன்றுவரை கல்வளை பிள்ளையார் ஆலயத்தின் பின்புறத்தினை தொடர்ந்து கடற்கரையை அண்டிய பகுதி வரை சுண்ணாம்புக் கற்கள் மற்றும் செங்கற்களிலான சிதைவுகளை அடையாளங்கான முடிகின்றது. சுண்ணாம்புக்கற்கள் சதுரமாக பொழிந்த கற்களாக ஒரு அடிக்கு கூடிய நீள, அகலம் கொண்டதாகவும், செங்கற்கள் ஒரு அடி நீள, அகலம் மற்றும் 03 அங்குல தடிப்பு கொண்டதாகவும் உள்ளன. கோட்டையின் வாயிற் பகுதி கிழக்கு பகுதியை நோக்கியதாகவும், கோட்டையின் வெளி வாயிற் பகுதியில் கல்வளைப் பிள்ளையார் என அழைக்கப்படும் ஆலயம், கோட்டையினுள்ளே மிகப் பழமையான கிராமியத் தெய்வங்கள் மரநிழலின் கீழ் அமைந்துள்ளதுடன், அதன் மிக அண்மையில் பொழிந்த சுண்ணாம்புக் கற்களாலான கிணறு சிதைந்த நிலையிலும் உள்ளது. கோட்டையின் உள்பகுதியில் காணப்படும் கிராமிய தெய்வங்களை விட தெற்கு பகுதியில் ஐயனார், அண்ணமார் மற்றும் இயற்கையான கல்லிலான வேறு சில சிறுதெய்வ வழிபாட்டிடங்களும் காணப்படுகின்றன (ஆய்வாளர்: களஆய்வு, 2021).

இப்பகுதியானது தற்போது தோட்டப்பயிர்செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்ற தனியாருக்குரிய நிலங்களாக காணப்படுகின்றது. இந்நிலங்கள் 1970 அளவில் மாப்பாணப்பிள்ளை என்பவரிடமிருந்து விலைக்கு வேண்டப்பட்டதாகவும், மாப்பாணப்பிள்ளை அக்கால சமூகத்தில் செல்வந்தராகவும், அரசாங்கத்தில் செல்வாக்குடையவராகவும் விளங்கினார் எனவும் அவ்வூர் மக்களின் தகவல்களின் மூலம் அறிய முடிகின்றது. இப்பகுதிக்குரிய இன்றைய உறுதிப் பதிவுகள் கல்வளை, கல்வளைக்கோட்டை என காணப்படுவதால் கல் - வளை கல்லிலான பாதுகாப்பு அரண் எனப் பொருள்பட இங்கு புராதன கோட்டை ஒன்று அமைந்திருப்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. கல்வளை என்னும் சொல் தற்காலத்தில் மருவி தல்வளை எனச் சொல்லப்படுவதுமுண்டு. இக்கோட்டைக்குரிய சிதைவுகள் குறைந்து 20 ஏக்கர் பரப்பிலாவது இருந்திருக்கலாம் எனத் தோன்றினாலும் அவ்விடங்களின பெரும்பகுதி தொடர்ச்சியான விவசாயத் தேவைக்கு உட்பட்டிருப்பதனால் தொல்லியல் மேலாய்வினூடாக அடையாளம் காண்பதென்பது சவாலான விடயமாகவுள்ளது. உப்பாற்றுக் குடா ஏரிப்பகுதியின் அண்மைப் பகுதியிலும் (மேற்கு), வடக்கு பகுதியிலும் பற்றைக்காடுகளுக்குள் அத்திவாரப் பகுதியை அடையாளம் காணமுடிந்தாலும் அதன்


ISSN (Print): 2448-9204

கிழக்கு பகுதி, கோட்டையின் நுழைவாசற் பகுதி மற்றும் தெற்கு அத்திவாரப் பகுதிகள் முற்றாக சிதைவடைந்த நிலையிலேயே உள்ளன. இவ்அத்திவாரப் பகுதிகளின் கற்கள் தற்போது வரை அகற்றப்பட்டு, வேறு தேவைகளுக்காக பயன்படுத்தபட்டு வருவதனைக் காணமுடிகின்றது. குறிப்பாக வயல்வெளிக்குரிய மணல்பாதைகள் அமைப்பிற்கும் அப்பகுதியின் ஆலயங்களின் அமைப்பிற்கும் கோட்டைப்பகுதியில் பெறப்பட்ட சுண்ணாம்புக்கற்கள், செங்கற்கள் பயன்படுத்தப்படுவதனையும், இவ்நோக்கங்களுக்காக வெட்டப்பட்ட ஆழமான குழியென்றையும் அவதானிக்க முடிந்தது. அண்மைக்காலத்தில் இப்பகுதியில் வீ.சிற்றம்பலம் என்பவர் விவசாயத் தேவைக்கு நிலத்தை பண்படுத்தும் போது தாமரைப் பூ அலங்காரமுடைய சிறு பானை ஒன்று உடைந்த நிலையில் வெளிப்பட்டதாகவும், அதனுள் நாணயங்கள் பல இருந்ததாகவும், அவ்நாணயங்களினை அவ்வப்போது ஆய்வுக்காக வருகை தரும் பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டி சென்றாகவும் கூறியிருந்தார். மேலும் எமது களப்பயணத்தின் போதும் இங்கு ஒரு பழமையான உரோமநாணயத்தினையும் கண்டுபிடிக்க முடிந்தது.

போர்த்துக்கேயர்கால ஆவணங்கள் மற்றும் யாழ்ப்பாண மன்னர்கள் கால இலக்கிய செய்திகளின் படி, நல்லூர் இராசதானி வீழ்ச்சியின் போது, அவ்இராசதானியின் கடைசி மன்னனான சங்கிலி மன்னன் கோப்பாய் பகுதிக்கு தப்பிவந்ததாகவும், பின்னர் போர்த்துக்கேயரால் கோப்பாய் பகுதியும் கைப்பற்றப்பட்டுவிட, கடல்நீரோரியினாலும், சதுப்புநிலங்களினாலும் சூழப்பட்ட பாதுகாப்பான பகுதிக்கு சென்று அங்கிருந்தே வன்னிக்கு தப்பி சென்றதாகவும் குறிப்பிடுகின்றது. புவியியல் அடிப்படையில் கோப்பாயை அடுத்துக் குறிப்பிடப்படும் பாதுகாப்பான பகுதி கல்வளைக் கோட்டையாகவே அமையமுடியும் (Ragupathy, 1987). சங்கிலி மன்னனுடன் தொடர்புடைய கோட்டையாகவே அல்லது காவலரணாகவே இவ்விடம் பார்க்கப்படுகின்றது. இதனாலே இப்பிரதேசங்களை அண்டிய இடங்கள் சங்கிலியாதோப்பு, சங்கிலியாதிடல், சங்கிலியன் வயல்வெளி, சங்கிலியாவளவு என அழைக்கப்பட்டு வருவதனையும் காணமுடிகின்றது.

இப்பகுதியில் இன்றுவரை நிலவுகின்ற வரலாற்றுக் கதைகளின் அடிப்படையில் நல்லூர் இராசதானி கால கோட்டையின் சிதைவுகளாகவே இவை அறியப்படுவதாலும், சோழர் தொடர்பை உறுதிப்படுத்தும் கல்வெட்டு மந்துவிலுக்கு மிக கிட்டிய தூரத்தில் உள்ள தற்போதைய மட்டுவிலைக் குறிப்பதும், கடல்வழித் தொடர்பின் மையத்தில் அமைந்திருப்பதும், இவ் முருகைகல், செங்கல் கட்டிடப் பாகங்கள், கட்டிட அத்திவாரங்கள், தொன்மையான குடியிருப்புக்களுக்கான சான்றுகள், வெளிநாட்டுத் தொடர்பிற்கான சான்றுகள் என்பன இவ்விடம் தொன்மையான துறைமுக நகரமாக விளங்கியிருந்ததனால் காலப்போக்கில் கோட்டை ஒன்று அமைக்கப்பட்டிருக்கலாம் எனவும், இதனையே யாழ்ப்பாண இராசதானி மன்னனான சங்கிலி மன்னனுடன் தொடர்புபடுத்தி வரலாற்றிலக்கியங்கள் குறிப்பிடுவதாகவும் கருத முடியும். ஆகையால் யாழ்ப்பாண வரலாறு பொறுத்து முக்கிய ஆதாரமாக விளங்கும் தொன்மை சிறப்பு


ISSN (Print): 2448-9204

வாய்ந்த இக்கோட்டைப் பகுதியில் முறையானதொரு தொல்லியல் அகழ்வாய்வு நடைபெறுமானால் பல வரலாற்றுத்தகவல்கள் பெறக்கூடும்.

கோட்டையின் சிதைவுகள் காணப்படும் பகுதியில் பொழிந்த முருகைக் கற்கள், சுண்ணாம்புக் கற்களிலால் அமைக்கப்பட்ட இரு பழமையான கிணறுகள் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது. கோட்டையுடன் தொடர்புபடுத்தப்படும் இக்கிணறுகள் மிகப் பழமையானவை என்பதனை அதன் அமைப்பு புலப்படுத்துகின்ற வகையில் காணப்படுவதால், பாதுகாக்கப்பட வேண்டிய மரபுரிமையாக இவற்றையும் அடையாளப்படுத்த முடியும். தொல்லியல் மேலாய்வுகளின் போது அடையாளப்படுத்தப்பட்ட தொல்லியல் எச்சங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடமுடியும். 16 உரோம நாணயங்கள் (கி.பி 01 – கி.பி 04 ஆம் நூற்றாண்டு), மட்பாண்ட எச்சங்கள், செங்கல், சுண்ணாம்புக் கற்களிலான கோட்டையின் சிதைவுகள் (Ragupathy, 1987), தாமரை மொட்டு வடிவத்தையுடைய பாத்திரத்தில் 700 உரோம நாணயங்கள், மண்ணிலான எட்டு மூக்குகளுள்ள பெரிய கெண்டி, மட்பாண்ட ஓடுகள், சுடுமண்ணிலான அகல் விளக்கு, உரோம அராபிய மட்பாண்டங்கள், இந்திய உரோம மட்பாண்டங்கள், புராதன மட்பாண்டங்கள், அதிக எண்ணிக்கையிலான செங்கற்கள், பொழிந்த முருகைக்கற்கள், உரோம, சோழ, பண்டிய நாணயங்கள் (புஸ்பரட்ணம், 2004; கமலநாதன், 2012; களஆய்வு: ஆய்வாளர், 2021).

### 1.2 சங்கிலியன்திடல்

தென்மராட்சிப் பிரதேசத்தின் தொல்லியல் தளங்களில் சங்கிலியன்திடல் பகுதியும் குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் புராதன குடியிருப்புக்களின் தோற்றம் பற்றி ஆய்வு செய்த கலாநிதி. பொ.ரகுபதி அவ்விடங்களில் ஒன்றாக வரணியின் சங்கிலியன் திடல் பகுதியினையும் குறிப்பிட்டிருந்தார். இவ்விடம் யாழ்ப்பாணத்தின் புராதன போக்குவரத்து வலைப்பின்னனில் முக்கியம் பெற்ற இடமாக அடையாளப்படுத்தியுள்ளதுடன், மட்பாண்ட எச்சங்களினையும் கண்டுபிடித்திருந்தார் (Ragupathy, 1987). 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1918) சுவாமி ஞானப்பிரகாரும் தனது வரலாற்று நூலில் சங்கிலியன் திடலினை அடையாளப்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இடைக்கால யாழ்ப்பாண வரலாற்றில் புவிச்சரிதவியல் பின்னனியில் நல்லூர், இருபாலை, கோப்பாய், மந்துவில் போன்ற இடங்கள் வலிகாமத்தினை உப்புநீரேரியூடாக (மந்துவிலுக்கு அருகில்) வடமராட்சியுடன் இணைக்கும் முக்கிய போக்குவரத்துப் பாதைகளாக விளங்கியிருந்தன. மந்துவிலிருந்து வரணியூடாக வடமாரட்சியின் புராதன மையங்களான நாகர்கோவில், வல்லிபுரம், குடத்தனை, உடுத்துறை போன்ற மையங்களுடன் இலகுவாக தொடர்பை ஏற்படுத்த முடிந்ததெனலாம் (Ragupathy, 1987).


ISSN (Print): 2448-9204

மந்துவில், வரணி பிரதேசங்கள் புராதன காலம் தொட்டு முக்கிய குடியிருப்பு மையங்களாகவும், வெளிநாட்டு, உள்நாட்டு தொடர்பிற்கான மத்திய நிலையமாகவும் விளங்கியிருந்ததன் பின்னனியில் நல்லூர் இராசதானி காலத்திலும் இவை முக்கியம் பெற்றிருந்தன. அந்தவகையில் இவ்இராசதானியின் இறுதி மன்னான சங்கிலி மன்னனுடன் தொடர்புபடுத்தப்படும் இடப்பெயர்கள் இங்கு காணப்படுகின்றன. அவை சங்கிலியாதோப்பு, சங்கிலியாதிடல், சங்கிலியன் வயல்வெளி, சங்கிலியாவளவு என்பனவாகும். இவ்விடப்பெயர்கள் சங்கிலி மன்னனுடைய ஆட்சி சிறப்புற்றதன் அடிப்படையில் வழங்கப்படுவதாகவே நம்பப்படுகின்றது. சங்கிலி மன்னனுடன் தொடர்புடைய பல வரலாற்றுச் சம்பவங்கள் இவ்விடத்தில் இடம்பெற்றமைக்கான பல வரலாற்றுக் கதைகள் இன்றுவரை இப்பகுதியில் நிலவுகின்றது. போர்த்துக்கேயருக்கும், சங்கிலி மன்னனுக்கும் இடையே போர் இடம்பெற்ற பகுதியின் நினைவாக சன்னாரிக்காடு, காத்துநின்ற சீமா போன்ற இடப்பெயர்களும் இங்கு வழங்கப்படுகின்றன. இப்பகுதி மிக உயர்ந்த மேட்டுநிலங்களாக காணப்படுவதுடன், இதன் ஒருபகுதி தம்பானைக் கடலினையும், கிழக்குப்பகுதி மாசேரிப் பகுதியிலுள்ள பங்குனிப்பிட்டியுடனும் தொடர்புபடுத்தப்படுத்தப்படுவதும், கல்வளைக்கோட்டைக்கு மிக அண்மையில் அமைந்திருப்பதும் இதனுடைய வரலாற்றுத் தொன்மைக்கு சாதக தன்மையினை வழங்கியிருந்தன. கல்வளைக் கோட்டைப் பகுதியில் காணப்படுவது போன்ற முருகைகற்களிலான பழமையான கிணறுகளினையும் இப்பகுதியில் காணமுடிகின்றது. தற்போதைய நிலையில் உயர்ந்த திடல் பகுதியான இதன் மேற்கு பக்கம் வயல் வெளிகளையும், தம்பானைக் கடலினைக் கொண்டும், ஏனைய பகுதிகளும் வயல், குளங்களால் சூழப்பட்டுள்ளது (ஆய்வாளர்: களஆய்வு, 2021).

### 1.3 பங்குனிப்பிட்டி

தென்மராட்சியின் தொல்லியல் மரபுரிமைத் தளங்களில் வரணியின் பங்குனிப்பிட்டி என்ற இடமும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்மையமானது இயற்றலை – மந்துவில் கோட்டைப்பகுதியையும், வடமராட்சி கடல்நீரேரிக்கு அண்மையில் அமைந்துள்ளதுடன், ஆரம்பகால போக்குவரத்துப் பாதையில் தென்மராட்சியினை வடமராட்சியுடன் இணைக்கும் முக்கிய மையமாகவும் விளங்கியிருந்தது. 1918 இல் சுவாமி ஞானப்பிரகாசரும், 1980 களில் கலாநிதி. இரகுபதி அவர்களும் பங்குனிப்பிட்டிப் பிரதேசத்தினை தொன்மையான தொல்லியல் தளமாக அடையாளப்படுத்தியுள்ளனர். கலாநிதி.இரகுபதி இவ்விடத்தினைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ஒரு ஏக்கர் நிலப்பகுதியில் செங்கற்கள், கற்கள் போன்ற கட்டிட அழிபாடுகள் மற்றும் தொன்மையான மட்பாண்ட எச்சங்கள் என்பன இங்கு பரவலாக காணப்பட்டது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். மேலும் இத்தொல்லியல் மரபுரிமை தளமானது அதன் அமைவிடப் பின்னனியிலும், இங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்களின் அடிப்படையிலும் கிறிஸ்துவிற்கு


ISSN (Print): 2448-9204

பிற்பட்ட முதல் நூற்றாண்டுகளிலேயே முக்கியம் பெற்றிருந்தது. இங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்களாக, தொன்மையான மட்பாண்ட எச்சங்கள் மற்றும் செங்கற்கள், கற்களிலான கட்டிட எச்சங்கள் அடையாளப்பட்டிருந்தது (Ragupathy, 1987). தற்போதைய நிலையில் பிட்டியான இவ்விடம் வயல் பகுதிகளாகவும், புல்தரை மற்றும் பனைமரப் பகுதிகளாகவும் காணப்படுகின்றது (ஆய்வாளர்: களஆய்வு, 2021).

### 1.4 வேரக்காடு

கிறிஸ்துவிற்கு பிற்பட்ட முதல் நூற்றாண்டு காலப்பகுதியில் முக்கியம் பெற்றதான இம்மையம் தென்மராட்சியின் முக்கிய தொல்லியல் தளங்களில் ஒன்றாகும். 1918இல் சுவாமி ஞானப்பிரகாசரும், 1980களில் கலாநிதி. இரகுபதி அவர்களும் இப்பிரதேசத்தினை தொன்மையான தொல்லியல் தளமாக அடையாளப்படுத்தியுள்ளனர். கச்சாய், சாவகச்சேரி போன்ற மையங்களுடன் இலகுவில் தொடர்பினை ஏற்படுத்தக் கூடிய அமைவிடத்தினைக் கொண்ட இம்மையம் புராதன காலத்தில் தென்மராட்சிக்கும், வடமராட்சிக்கும் இடையிலான வர்த்தக போக்குவரத்துப் பாதையில் முக்கியம் பெற்றிருந்தது. வேரக்காடு என்ற இடப்பெயர் அக்காலப் பொருளாதாரத்தில் முக்கியம் பெற்ற நெசவுத் தொழிலுடன் தொடர்புடைய தாவரமான சாயவேர் (சாய – வேர்) உற்பத்தியினைக் குறித்து நிற்பதன் அடிப்படையில் ஏற்பட்டதாகவும் அறிய முடிகின்றது. இங்கு தொன்மையான மட்பாண்ட எச்சங்கள் பரவலாக கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றில் தடிப்பான விளிம்பினையுடைய சிவப்பு நிற மட்பாண்டங்களும், செப்பனிடப்பட்ட தடிப்பான விளிம்பினையுடைய மட்பாண்ட எச்சங்களும் குறிப்பிடத்தக்கனவாகும் (Ragupathy, 1987). தற்போதைய நிலையில் புதிய வீட்டுக் குடியேற்றங்களின் அமைவினால், இவ்விடம் அடையாளங்காண முடியாதுள்ளதெனிலும் சிலபகுதிகளில் உயரமான மண்மேட்டினை தற்போதும் அடையாளங் காணமுடிகின்றது (ஆய்வாளர்: களஆய்வு, 2021).

### 1.5 கச்சாய் துறைமுகம் மற்றும் கோட்டை

தென்மராட்சிப் பிரதேசத்தின் புராதன துறைமுகமாக கச்சாய் முக்கியம் பெறுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தொன்மையான குடியிருப்புக்கள் பற்றி ஆய்வு செய்த கலாநிதி.பொ.இரகுபதி கச்சாய் பிரதேசத்தினை தொன்மையான தொல்லியல் மரபுரிமைத் தளமாகவே அடையாளப்படுத்தியுள்ளார். ஐந்து ஏக்கர் பரப்பில் தொன்மையான தொல்லியல் எச்சங்கள் கிடைக்கப்பெற்றதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார் (Ragupathy, 1987). ஐரோப்பியர் ஆட்சியின் பிற்பகுதியில் புதிய போக்குவரத்து வீதிகள் அமைக்கும் வரை பெருநிலப்பரப்பை இணைக்கும் முக்கிய கடல்வழிப்போக்குவரத்து மையமாக கச்சாய் விளங்கியிருந்தது. குறிப்பாக ஆனையிறவுப் பாதையூடான தரைவழிப் போக்குவரத்தும், கேரதீவு ஊடான பெருநிலப்பரப்பின் போக்குவரத்து தொடர்பும், ஆழ்கடல் போக்குவரத்தும், நீராவிக் கப்பல்களது அறிமுகமும் கச்சாய்த் துறைமுகத்தினூடான செயற்பாட்டை குறைவடையந் செய்து, தற்போது சாதாரண மீன்பிடித்துறையாக இதனை மாற்றியமைத்தன. எனினும் இத்துறைமுகப் பகுதிகளில்


ISSN (Print): 2448-9204

கிடைக்கப்பெற்ற உரோம நாணயங்கள், உரோமசீன மட்பாண்ட எச்சங்கள், கண்ணாடிப் பொருட்கள் என்பனவெல்லாம் இப்பிரதேசத்தின் புராதன வர்த்தகப் தொடர்பிற்கான ஆதாரங்களாகும்.

கச்சாய்த் துறைமுகம் ஊடாக பூநகரி செல்லும் மிகக்கிட்டிய போக்குவரத்துப்பாதை காணப்படுகின்றது. இதனால் தென்னிந்திய வர்த்தக, கலாச்சாரத் தொடர்புகள் இலகுவில் வடஇலங்கையை வந்து சேர்ந்தன. அத்தோடு ஆரம்பகாலத்திலிருந்து யாழ்ப்பாண மன்னர்கள் காலம்வரை கச்சாய்த் துறைமுகம் முக்கியமான வாணிப மார்க்கமாக மிளிந்திருந்தது. இதனை இலக்கியங்களுடாகவும், கச்சாய் பகுதியில் கிடைத்த தொல்லியல் எச்சங்களும், இப்பகுதியில் புழக்கதிலுள்ள இடப்பெயர்கள் ஊடாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது.

யாழ்ப்பாண அரசுகால இலக்கியங்களில் கச்சாய்த் துறைமுகம் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. யாழ்ப்பாண அரசு காலத்திலே வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து கச்சாய்த்துறை முகத்தினூடாக வர்த்தகப் பொருட்கள் தென்னிந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாகவும், அதே போன்று கச்சாய்த் துறைமுகத்தில் வந்திறங்கிய யானைகள் ஆனைப்பந்தி போன்ற இடங்களில் கட்டிவைக்கப்பட்டுப் பின்னர் காங்கேசன்துறைமுகத்தினூடாக ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. யாழ்ப்பாண இராசதானி மன்னன் பூநகரி, மாதோட்டப்பகுதிகளில் பிடித்த மற்றும் திறையாகப் பிடித்த யானைகள் கச்சாய்த் துறைமுகத்தினூடாகவே கொண்டு வரப்பட்டதாகவும் ஐரோப்பியர் காலத்தின் முதற்பகுதி வரை இந்நடைமுறையே காணப்பட்டதாகவும் அறியமுடிகின்றது. இவ்வாறாக இத்துறைமுகம் யாழ்ப்பாண மன்னர் காலத்திருந்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலம் வரை முக்கிய உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக துறைமுகமாகவும், சுங்க வரிகளைப் பெறுமிடமாகவும், கடற்படை மையமாகவும் விளங்கியிருந்தற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இதன்காரணமாக, யாழ்ப்பாணத்துடன் தொடர்புடைய புராதன வெளிநாட்டுக் குடியேற்றங்கள் முதலில் ஏற்பட்ட இடமாகவும் கச்சாய்த் துறைமுகம் விளங்கியிருந்தது. குறிப்பாக கலிங்கர், சாவகர், மலையாளத்தார், கன்னார் குடியேறிய இடங்களாக தென்மராட்சியினை அறியமுடிவதும், யாழ்ப்பாணத்தில் கி.பி 13 ஆம் நூற்றாண்டின் பின் ஏற்பட்ட இஸ்லாமியர் குடியேற்றங்கள் முதலில் ஏற்பட்ட இடங்களாக தென்மராட்சிப் (முகமாலை, உசன், மிருசுவில்) பிரதேசம் விளங்குவதற்கு கச்சாய்த் துறைமுகத்திற்கும் கேரளத்திற்கும் இடையிலான வணிகத் தொடர்புகளே காரணமாக அமைந்தன. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் இத்துறைமுகத்தினை அண்டி தேவாலயங்கள் அமைக்கப்பட்டதுடன், முருகைக் கற்களைப் பயன்படுத்தி கோட்டை ஒன்று அமைக்கப்பட்டதாக அறிய முடிந்தாலும் தற்போது அதன் இடிபாடுகளினுடைய எச்சங்களினையே காணமுடிகின்றது. இப்பின்னனியிலேயே கோட்டைப்பிபட்டி என்ற இடப்பெயர் தற்போது வரை வழக்கிலிருப்பதனையும் குறிப்பிடலாம். மேலும் இம்மையம்


ISSN (Print): 2448-9204

முனியன்காடு, பாதிரியார் தோட்டம் போன்ற பெயர்களாலும் அறியப்படுகின்றது. இங்கு தொன்மையான செங்கற்கள், முருகைக்கற்களிலான கட்டிட எச்சங்கள், மட்பாண்ட எச்சங்கள் பரவலாக காணப்பட்டிருந்தன (Ragupathy, 1987). மேலும் காலத்திற்கு காலம் வெளிப்பட்ட நாணயங்கள், மட்பாண்ட எச்சங்கள், கண்ணாடிப் பொருட்கள் போன்ற தொல்லியல் எச்சங்களும் இங்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. புராதன காலத்திலிருந்து தொன்மையான துறைமுகப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்ட இப்பிரதேசம் தற்போது சிறிய மீன்பிடித்துறையாக விளங்குகின்றது.

**சாவகச்சேரி**

தென்மராட்சியின் முக்கிய தொல்லியல் மரபுரிமை தளங்களில் சாவகச்சேரியும் ஒன்றாகும். 15ஆம் நூற்றாண்டுக்குரிய கோகில சந்தேஸய என்ற சிங்கள இலக்கியத்தில் சாவக்கோட்டையெனவும், 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டுக்குரிய திரி சிங்களே கடயிம் ஸஹ வித்தி என்ற நூலில் சாவகிரி எனவும், யாழ்ப்பாண இராசதானிகால வரலாற்றுடன் இவ்விடம் தொடர்புபடுத்தி கூறப்படுகின்றது. யாழ்ப்பாண அரசுகாலத்தில் சாவகச்சேரி முக்கிய இடமாக விளங்கியிருந்ததென்பதனை அறியமுடிகின்றது. எனினும் யாழ்ப்பாண அரசுகாலத்திற்கு முன்னரே சாவகச்சேரியின் வரலாறு தொன்மையானதென்பதற்கு அதன் அமைவிட செல்வாக்கும், இங்கு கிடைக்கப்பெற்ற தொல்பொருட் எச்சங்களும் எடுத்துக் காட்டுகின்றன. சாவகச்சேரி கடல்வழித் தொடர்பிற்கான சாதகச் தன்மையைக் கொண்டிருப்பதுடன், தொன்மையான துறைமுகப்பகுதிகளான கச்சாய், பூநகரி என்பவற்றுக்கு மிககிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதும் புராதனகால கடல்வழிப் போக்குவரத்தில் முக்கிய மையமாக விளங்கியிருந்தது. இதனை உறுதிப்படுத்துவதில் இங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகளுக்கு முக்கிய பங்குண்டு குறிப்பாக இப்பிரதேசங்களிலும், அதனை அண்டிய பகுதிகளான கச்சாய், கெற்பெலி, கிளாலி ஆகிய இடங்களிலும் கிடைக்கப்பெற்ற ஆதிக்குடியிருப்புக்களுக்குரிய மட்பாண்டங்கள், செங்கட்டிகளால் கட்டப்பட்டிருந்த கட்டிட அழிபாடுகள், கி.பி 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டில் அரோபிய, சீனத் தொடர்புகளுக்கான சான்றுகள், 10 ஆம், 11 ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய தொடர்புகளுக்கான சான்றுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன (Ragupathy, 1987, புஸ்பரட்ணம், 1993).

மேலும் தற்போதைய சாவகச்சேரி பஸ்தரிப்பிடம், சந்தை, நீதிமன்றம், கலாசார மண்டபம் ஆகிய பகுதிகளில் தொன்மையான இந்து ஆலயம் ஒன்று இருந்ததற்கான எச்சங்கள் காலத்துக்குகாலம் கட்டிடங்களுக்கு அத்திவாரம் வெட்டும் போதும் எதிர்பாராத சந்தர்ப்பங்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. தற்போதைய நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள இராசமாளிகை வளவுப் பகுதியில் கிடைக்கப்பெற்ற இந்து விக்கிரகங்களும், இவ்விடத்தில் முன்பு ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் எனக் கருதக்கூடிய அளவிற்கு செங்கட்டிகளும், கட்டிட சிதைவுகளும் காணப்படுகின்றன. இவ்விடம் இராசமாளிகை


ISSN (Print): 2448-9204

வளவு எனவும், அதற்கு அருகில் உள்ள காணி இராசவளவு எனவும், அருகில் உள்ள வீதி இராசவீதி எனவும் அழைக்கப்படுவதும் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. மேலும் புதிய நீதிமன்றத்திற்கு அத்திவாரம் வெட்டும் போது வெளிவந்த பொழிந்த கற்கள் கிடைக்கப்பெற்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். இவ்வாறான சான்றுகள் ஆதிக்குடியிருப்புக்களின் தோற்றம் தொடங்கி ஐரோப்பியர் காலம் வரை தொடர்ச்சியான வரலாற்றுப்பிரதேசமாக சாவகச்சேரியினை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் தொன்மையான மட்பாண்டங்கள், செங்கட்டிகளாலான கட்டிட அழிபாடுகள், வாரிவனேஸ்வரர் ஆலயத்திற்குரியதாக அடையாளப்படுத்தப்பட்ட இந்து கடவுளருக்குரிய விக்கிரகங்கள், ஆதிகால மத்திய கால நாணயங்கள் என்பன இங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்களாகும் (புஸ்பரட்ணம், 2012).

## 2. சுமைதாங்கிக்கல், ஆவுரஞ்சிக்கல், மடங்கள்

மோட்டார் வாகனப் போக்குவரத்து அறிமுகமாவதற்கு முன்னர் மக்கள் கால்நடையாகவும், மாட்டுவண்டியிலும் பிரயாணத்தை மேற்கொண்டதால் அவர்களின் தேவைகருதியே இவை வீதியோரங்களில் அமைக்கப்பட்டிருந்தன. இக்கலாசார மரபுரிமைச் சின்னங்கள் தோற்ற அமைப்பில் சிறுகட்டிடங்களாக இருப்பினும் அவற்றின் அமைவிடம், அவற்றில் உள்ள குறியீடுகள், உருவங்கள், சாசனங்கள் என்பனவெல்லாம் அவை முன்பொரு காலத்தில் எமது சமூக வழக்கிலிருந்த பிரதேச வேறுபாடு, சமூக ஏற்றத்தாழ்வுகள், சமய நம்பிக்கைகள், பொருளாதார முறைகள் என்பவற்றை அடையாளம் காட்டுவதாக அமைந்திருப்பதை உணரமுடியும். இதனால்தான் இம்மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு என்பதை எமது பண்பாட்டின் பாதுகாப்போடு இணைத்துப் பார்க்கவேண்டியுள்ளது. பண்டைக்காலத்தில் மக்களால் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்ட இடங்களிலும், மக்கள் ஒன்று கூடும் மையங்களிலும் அமைக்கப்பட்டிருந்த சுமைதாங்கிக்கல், ஆவுரஞ்சிக்கல், மடங்கள் போன்றன ஆரம்பகாலத்தின் துறைமுக நகரங்களையும், தொன்மையான பிரதேசங்களையும், உள்நாட்டு வணிக மார்க்கங்களையும் அறிந்து கொள்வதற்கு பெரிதும் உதவி செய்கின்றது. இப்பின்னனியில் இம்மூன்று மரபுரிமைச் சின்னங்களுடன் இணைந்த வகையில் குளங்கள், கேணிகள் மற்றும் கோயில்கள் போன்றவற்றின் அமைவினைக் காணமுடிகின்றது. இவ்மரபுரிமைச் சின்னங்களுடன் கோயில்களின் அமைவானது தொன்மையான வணிக நடவடிக்கையினையும், சமய வழிபாட்டினையும் தொடர்புபடுத்திக் காட்டுகின்றது. இந்தவகையில் தென்மராட்சிப் பிரதேசத்தின் ஆவுரஞ்சிக் கற்கள், சுமைதாங்கிக் கற்கள், மடங்கள், கோணிகள், குளங்கள் என்பன பெரிதும் கோயில்களுக்கு அண்மையிலேயே இனங்காணமுடிகின்றது. எனவே தற்காலத்தில் கவனிப்பாரற்று, பயன்பாட்டிலிருந்து அருகி வரும் இம்மரபுரிமைச் சின்னங்களினை தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரதான வீதிகளிலும், தற்போது மக்கள் வாழாத போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படாத பல இடங்களில் காணமுடிகின்றது. இவ்வாறான


ISSN (Print): 2448-9204

இடங்களில் புராதன காலம் தொட்டு போக்குவரத்துப் பாதைகள், மக்கள் கூடுகின்ற மையங்கள் அமைந்திருந்தன என்பதற்கு இவை சான்றாகவுள்ளன. குறிப்பாக தென்மராட்சிப் பிரதேசத்தின் முக்கிய வீதிகளான கொடிகாமம் - பருத்தித்துறை, சாவகச்சேரி – பருத்தித்துறை, புத்தூர் - மட்டுவில், கச்சாய் - கொடிகாமம் போன்ற வீதிகளில் இன்றுவரை இம்மூன்று மரபுரிமைச் சின்னங்களினை அடையாளம் காணமுடிகின்றது. இக்காலத்தில் பருத்தித்துறை, கச்சாய், மட்டுவில், மந்துவில் போன்றன குடியேற்ற மையங்களாக, துறைமுக வர்த்தக நகரங்களுடான தொடர்பை புலப்படுத்தி நிற்கின்றன என்பதில் சந்தேகமில்லை. வர்த்தக, துறைமுக நகரங்களின் உள்நாட்டு தொடர்புகளுக்கு தரைவழிப் போக்குவரத்து பாதைகளும் பயன்படுத்தப்பட்டன. இதற்கு நாகர் கோயிலுடாக பரந்தன் செல்லும் வீதியையும், கச்சாய் ஊடாக பூநகரி செல்லும் வீதியினையும் குறிப்பிடலாம்.

சுமைதாங்கிக்கல், ஆவுரஞ்சிக்கல், மடங்கள் என்பன சிறு கட்டிட அமைவாக இருப்பதனால், காலத்திற்கு காலம் பல்வேறு காரணங்களால் ஏற்பட்ட கலையழிவு நடவடிக்கைகளிலிருந்து தப்பிய மரபுரிமைச் சின்னங்களாகவும் அடையாளம் காணமுடிகின்றது. இவற்றுள் பல பிற்காலத்தில் தோன்றியிருந்தாலும் அவற்றிற்கெல்லாம் 2000 ஆண்டுகளுக்கு குறையாத வரலாற்று மரபு உண்டு என்பதை பழந்தமிழ் இலக்கியங்களில் இவை பற்றி வரும் குறிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வகையில் பின்வரும் சுமைதாங்கிக்கல், ஆவுரஞ்சிக்கல், மடங்கள் போன்றவற்றினை தென்மராட்சிப் பிரதேசத்தில் அடையாளம் காணமுடிகின்றது. அவை மட்டுவில் ஆயத்தடி குளம், ஆவுரஞ்சிக்கல், நுணாவில் பருத்தித்துறை வீதி (வைரவர் கோயில்) சுமைதாங்கி, கிணறு, நுணாவில் A9 வீதி சுமைதாங்கி, மடம், கிணறு, மட்டுவில் வேரங்கேணி பிள்ளையார் சுமைதாங்கி, பெருங்குளம் சந்தி சுமைதாங்கி, சாவகச்சேரி ஆவுரஞ்சாடி முருகமூர்த்தி கோயில் சுமைதாங்கி, சுட்டிபுரம் அம்மன் சுமைதாங்கி, வரணி கொடிகாமம் வீதி எருவன் பிள்ளையார் சுமைதாங்கி, சாவலப்பிட்டி கந்தசாமி கோயில் ஆவுரஞ்சிக்கல், கொட்டிகான் அம்மன் ஆவுரஞ்சிக்கல், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் மடம், சாவகச்சேரி பஸ்தரிப்பிடம் பழைய கிணறு, வரணி சுமைதாங்கி, கச்சாய் வீதி சுமைதாங்கி என்பனவாகும்.

## 3. இந்துக்கோயில்கள்

ஆகமம் சாராத கிராமிய வழிபாட்டு மரபுடன் இணைந்த வகையிலான வழிபாட்டிடங்கள், ஆகமம் சார்ந்த வழிபாட்டிடங்களென தென்மராட்சிப் பகுதியில் எண்ணிக்கையில் அதிகமான ஆலயங்களினை காணமுடிகின்றது. இவற்றுள் சில வரலாற்று முக்கியம் பெற்றவையாகவும், ஐதீக கதைகளின் அடிப்படையிலான தொன்மம் மிக்கவையாகவும் காணப்படுவதுடன், சில கிராமிய வழிபாட்டிடங்கள் நவீனமயமாக்கலின் பின்னனியில் ஆகமம் சார்ந்த ஆலயங்களாக மாற்றம் பெற்றவையாகவும், புதிய ஆலயங்களாகவும் காணப்படுகின்றன. தொன்மையான வழிபாட்டு நெறியாகிய ஆகமம் சாராத வழிபாட்டிடங்கள் சிறு கொட்டில்களிலும், மரநிழல்களிலும், வயல்கரைகளிலும், நீர்


ISSN (Print): 2448-9204

நிலைகளினை அண்டியும் தெய்வங்களை வைத்து ஆகமம் முறைசாராத வழிபாட்டு நெறிகளாகிய பொங்கல், பண்டமெடுத்தல், மடை, படையல், பலியொடுத்தல, நேர்திக்கடன் செலுத்துதல், மாமிச உணவு, மது படைத்தல், வாக்கு அல்லது குறிசொல்லுதல் உருவெறி ஆடுதல், தீக்குளித்தல் போன்ற முறைகளில் வழிபடப்படுகின்றன. தென்மராட்சி மக்களால் இன்றும் அண்ணமார், நாச்சிமார், ஐயனார், முத்துமாரி, மாரியம்மன், காளி, பேச்சியம்மன், கண்ணகி, கறுப்பர், வைரவர், நாகதம்பிரான், வீரபத்திரர், பெரிய தம்பிரான், அனுமான், சுடலைமாடன், காத்தவாராயர், காடேறி, நீலி, சூலி, மாடன், காளகண்டன், முனி, ஊத்தைக்குடியன், களாமுனி போன்ற பல தெய்வங்கள் கிராமிய வழிபாட்டு மரபை பின்பற்றி வழிபடப்பட்டு வருகின்றன. தென்மராட்சிப் பிரதேசத்தின் முக்கிய பெற்ற இந்துக்கோயில் மரபுரிமைகளாக பின்வரும் ஆலயங்களினை உதாரணங்களாக குறிப்பிட முடியும்.

### 3:1 கல்வளை : கிராமியத் தெய்வ வழிபாட்டிடம்

இன்றைய நிலையில் கல்வளைப்பிள்ளையார் ஆலயத்திற்கு பின்புறமாக கல்வளைக் கோட்டைக்குரிய சிதைவுகளினை காணமுடிகின்றது. அதன் பிராதன நுழைவாயிற் பகுதி கிழக்கு நோக்கியதாக அமைந்திருந்தது. இக்கோட்டை அமைந்த பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் கிராமியத் தெய்வ வழிபாட்டிடங்களை காணமுடிகின்றது. தெற்கு பகுதியில் அண்ணமார், ஐயனார், வேறும் சில கிராமியத் தெய்வங்களினை சிறுகட்டிட அமைப்பிலான ஆலயங்களிலும், மரநிழலின் கீழ் இயற்கையான கற்களையும், சூலங்களினையும் வைத்தும் வழிபடப்படுகின்றது. கோட்டை அமைந்த பகுதிக்கு வடகிழக்கில் வீரபத்திரர் ஆலயமும், மேலும் கோட்டையின் உட்புறமாக பற்றைக்காடுகள் சூழ்ந்த பகுதியில் மரநிழலின் கீழ் இயற்கையிலான கற்களை தெய்வங்களாக கருதி வழிபாடியற்றப்பட்டு வருவதனையும் காணமுடிகின்றது. 1993 - 94 காலப்பகுதியில் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களின் மேலாய்வின் போது வட்டமாக வளர்ந்துள்ள மரங்களுக்கு கீழே செங்கல் மேடை அமைக்கப்பட்டு, அதன் மேல் பதினான்கு கற்கள் நடப்பட்டு நாச்சிமார், ஐயனார், விநாயகர், நாதம்பிரான், காளி, அண்ணமார், வைரவர், காளகண்டன், முனி, ஊத்தைக்குடியன், களாமுனி ஆகிய பெயரில் வழிபடப்பட்டிருந்ததனையும், அவற்றில் இரண்டு மனித தோற்றத்திற்குரிய சாயலைக் கொண்டிருப்பதனையும், சில கற்களில் சூலம் போன்ற சமயச்சின்னங்கள் இணைக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். போர்க் கடவுளர்களான ஐயனார், நாச்சிமார், அண்ணமார் போன்ற தெய்வங்களும், அவ்வழிபாட்டில் உள்ள கற்களும் தமிழக சங்காலப் பின்னனியில் வைத்து நோக்கப்படுகின்றது. அண்ணமார் என்பது முற்காலத்தில் யுத்த வீரர்களாய் இருந்தவர்களையும், நாச்சிமார் என்பது கணவர்மார் வீரத்துடன் இறந்த பின் உடன்கட்டையேறிய ஏழு பெண்களையும் குறிப்பதாகும். 1980களில் கலாநிதி.பொ.ரகுபதி அவர்களும் தனது தொல்லியல் நூலில் இக்கிராமியத் தெய்வங்கள் பற்றியும், அத்தெய்வங்களுடைய பெயர்கள் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

 ISSN (Print): 2448-9204

தற்போது பல்வேறு அளவுகளில், வடிவங்களில் 12 கற்கள் தெய்வங்களாக உருவகித்து வழிபாடியற்றப்பட்டும், அவற்றின் சிலவற்றுடன் சூலங்கள் அமைத்து வழிபடப்படுவதனைக் காணமுடிவதுடன் இரண்டு கற்கள் தொலைந்துள்ள நிலையில் அவற்றின் நினைவாக மரத்திற்கு பட்டு சாத்தி வழிபடப்பட்டு வருவதனையும் அவதானிக்கமுடிகின்றது. இப்பகுதியானது புராதன துறைமுகப் பகுதியாகவும், கோட்டைப் பகுதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதால் இக்கிராமியத் தெய்வங்களினை போர்த்தெய்வங்களாகவும், பாதுகாப்பு தெய்வங்களாகவும், நடுகல் மரபிலான தெய்வங்களாகவும் கருதமுடியும். மேலும் இவ்வழிபாட்டிடத்திற்கு பெண்கள் அனுமதிக்கப்படாத வழமையையும் காணமுடிகின்றது. இன்றும் அப்பிரதேச மக்கள் அண்ணமாருக்கு பனங்கிழங்கு, ஒடியல் (ஒடியல் பிட்டு, கூழ்) போன்றவற்றினை பனையோலையிலான பிளாவில் (தட்டுவம்) முதன் முதலில் மாமிச உணவுகளுடன் அண்ணமாருக்கு படையல் செய்த பின்னரே தமது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதனையும் காணமுடிகின்றது. இவ்வழக்கம் தென்மராட்சிப் பிரதேசத்திற்குரிய தனித்துவமான பண்பாட்டு மரபுகளில் ஒன்றாகும். இவைதவிர பல கிராமிய தெய்வங்கள் மற்றும் அவற்றுக்கான வழிபாட்டு முறைகளினையும் தென்மராட்சிப் பிரதேசத்தில் அடையாளம் காணமுடிகின்றது.

### 3.2 கல்வளைப் பிள்ளையார் கோவில்

தென்மராட்சிப் பிரதேசத்தின் தொன்மை வாய்ந்த வரலாற்றுடன் இணைந்த வகையில் கல்வளைப் பிள்ளையார் ஆலயம் முக்கிய தொல்லியல் மரபுரிமைச் சின்னமாக விளங்குகின்றது. இங்கு காணப்பட்ட செங்கல், முருகைகல் அழிபாடுகளும், அதன் எச்சங்களும், தொல்லியல் மேலாய்வில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களும் இப்பகுதியில் கல்வளைக்கோட்டை எனப்படும் கோட்டை அமைந்திருந்ததனையும், இதன் வாசற்பகுதியில் அமைக்கப்பட்ட ஆலயம் கோட்டைவாசல் ஆலயமெனவும் கருதும் நம்பிக்கை இன்றுவரை காணப்படுகின்றது. தற்போதைய ஆலயம் ஒர் ஆகம மரபுக்குரிய பண்புகள் மற்றும் வழிபாட்டு மரபுகளினை கொண்டு மாற்றம் பெற்றிருந்தாலும், இவ்வாலயம் பற்றி நிலவும் வரலாற்றுக்கதைகள் மற்றும் அப்பகுதிக்குரிய தொல்லியல் எச்சங்கள் என்பன, இவ்வாலயத்தின் உருவாக்கத்தினை இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பதனை எடுத்துக்காட்டி நிற்கின்றது. கல்வளைக்கோட்டையானது சிறப்பு பெற்ற காலப்பகுதியில் இக்கோட்டையின் பெயரால் அழைக்கப்படும் கல்வளைப் பிள்ளையார் ஆலயமும் முக்கியம் பெற்றிருக்கும். 1980களில் கலாநிதி பொ.ரகுபதி கல்வளைப் பிள்ளையார் ஆலயம் பற்றியும் அதன் தொன்மை பற்றியும் தனது ஆய்வில் குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் இயற்றப்பட்ட 'கல்வளை அந்தாதி' இவ் ஆலயத்தினையே குறிப்பதாக சுட்டிக்காட்டினார். பொதுவாக கல்வளை அந்தாதி சண்டிலிப்பாயில் அமைந்திருக்கும் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் மரபே காணப்படுகின்றதெனிலும்,

 ISSN (Print): 2448-9204

இவ்அந்தாதியில் கூறப்பட்ட விடயங்கள் யாவும் இயற்றாலை – மந்துவில் பகுதியில் அமைந்திருக்கும் ஆலயத்திற்கே பொருந்தும் என்பதில் சந்தேகமில்லை. அதாவது சண்டிலிப்பாயில் உள்ள விநாயகர் நாமம் ஸ்ரீகற்பக விநாயகராகவும், இயற்றாலை மந்துவிலுள்ள விநாயகர் நாமம் ஸ்ரீபரமானந்தப் பிள்ளையாரும் ஆகும். கல்வளை அந்தாதி குறிப்பிடப்படும் விநாயகரது நாமம் ஸ்ரீபரமானந்தப் பிள்ளையாராகும். இதனை கல்வளை அந்தாதியில் 49 ஆவது செய்யுளின் இறுதியாக வரும் 'பரமானந்தப் பிள்ளையார் துணைச்சேவடிப் பங்கயமே' என்ற பாடலடியினை உதாரணமாகக் குறிப்பிடலாம். மேலும் கல்வளை அந்தாதியில் வரும் உப்பங்கழி, கண்டல் வாய்க்கால், மாங்கன் மீன் போன்ற இயற்கை வர்ணனைகள் இயற்றாலை – மந்துவில் பகுதிக்கும், அதனை அண்டிய பிரதேசங்களுக்குமே பொருந்தக் கூடியதாகவுள்ளது.

### 3.3 கல்வத்தை சிவன் கோயில்

தென்மராட்சிப் பிரதேசத்தின் தொன்மை வாய்ந்த மரபுரிமைகளில் கல்வத்தை சிவன் கோயிலும் ஒன்றாகும். இலங்கையில் சோழர் ஆட்சிக் காலம் தொட்டு தொடர்ச்சியாக வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தப்படும் இவ்வாலயம் தென்மராட்சியின் மட்டுவில் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சி செல்லும் முக்கிய பாதைகளில் மட்டுவில் பகுதி அமைந்திருந்திருப்பதாலும், தொண்டைமானாறு கடல் நீரேரி சார்ந்த மையத்தில் அமைந்திருப்பதன் காரணமாகவும் யாழ்ப்பாணத்தின் தொன்மையான வரலாற்றில் மட்டுவில் முக்கிய பங்கு வகித்திருந்தது. கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்குரிய சோழக் கல்வெட்டுக்களான பல்லவராஜன் பேட்டைக் கல்வெட்டு, திருவாலங்காட்டுக் கல்வெட்டு ஆகியன சோழப் படைத் தளபதியான இரண்டாம் இராஜாதிராஜ சோழனின் ஈழத்துப் படையெடுப்புப் பற்றி குறிப்பிடும் போது, அக்காலத்தில் துறைமுகமாக விளங்கிய மட்டுவில் என்னும் இடத்தையும், அவ்விடங்களில் நிலைகொண்ட படைவீரர்களையும், யானைகளையும் சோழப்படைகள் சிறைபிடித்து தமிழ்நாடு கொண்டு சென்ற செய்தியினை குறிப்பிடுகின்றன (சதாசிவபண்டாரத்தார், 1954.). கல்வத்தை சிவன் ஆலயமானது முழுமையான திராவிடக் கட்டிடக் கலைப்பாணிக்குரிய கூறுகளினை கொண்டமைந்ததாகும். பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்கள் இவ்வாலயத்தின் பழமை பற்றிக் குறிப்பிடும் பொழுது, இக்கோயிலின் பழமையான இடிந்த கட்டிடப் பாகங்கள் தற்போது இல்லையெனவும், 1990 களில் இக்கோயிலினை தான் பார்த்த போது மிகப் பழமை வாய்ந்த தமிழக திராவிடக் கலை மரபை எடுத்துக் காட்டும் வகையில் இக்கோயிலின் அமைப்பு இருந்ததை அவதானிக்க முடிந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும் பழமையான கல்வத்தைச் சிவன் கோயிலின் தூண் அமைப்புக்கள், கர்ப்பக்கிரகத்திற்கு மேலே காணப்படுகின்ற விமானம் குறிப்பாக கோதிகை, கூடு, கும்மட்டம், சாலை போன்ற அம்சங்கள், சதுர வடிவில் அமைக்கப்பட்ட சிவலிங்கம், ஏனைய கலை வடிவங்கள் என்பனவெல்லாம், இக்கோயிலினை சோழர் கால திராவிடக் கட்டிடக் கலைப்பாணிக்குரிய ஆலயமாகவே எடுத்துக்காட்டுகின்றது எனவும்,

 ISSN (Print): 2448-9204

இவ்வாலயத்திற்குரிய ஒன்பது விக்கிரகங்களினை கேணிக்குள்ளிலிருந்து எடுத்து ஆய்வுக்குட்படுத்தியதாகவும், பின்னர் அவை கேணிக்குள்ளேயே போடப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார் (புஸ்பரட்ணம், 2011).

தற்போதைய ஆலயமானது பிற்கால மாற்றங்களுக்குட்பட்ட வகையிலேயே காணப்படுகின்றது. அத்துடன் தற்போதைய ஆலயமானது தோற்றத்தில் சிறிதாக இருப்பினும், பழமையான ஆலயமானது அனைத்து அம்சங்களும் கொண்ட பெரிய ஆலயமாக இருந்திருக்கும். இவ்வாலயத்திற்கு கிழக்குப் பக்கமாக சற்றுத் தொலைவில் மரங்கள் வளர்ந்த மறைவான பகுதியில் பிராமணர் குடியிருப்புக்குரிய கட்டிட அழிபாடுகளை அடையாளம் காணமுடிகின்றது. இவ்விருப்பிடங்களின் கட்டிடங்கள் ஒவ்வொன்றும் இரண்டு அடி அகலம் கொண்ட சுதையால் கட்டப்பட்ட மிகப் பெரிய கட்டிடங்களாகக் காணப்படுகின்றன. தற்போது சுற்று மதிலுடன் கூடியதான இவ்வாலயம் புதிய வடிவம் பெற்றிருந்தாலும் கூட பழைய கோவிலானது தற்போதைய கல்லுவம் பிள்ளையார் ஆலயத்தினை அடுத்தே பெரிய ஆலயமாக அனைத்து அம்சங்களும் கொண்டதாக விளங்கியிருக்க வேண்டும். எனினும் தற்போதைய சிவன் ஆலயம் இப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னதாக புதிய கட்டிட கலை அம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றது. மேலும் இச்சிவன் ஆலயத்தின் அண்மைப் பகுதியில் கிராமியத் தெய்வங்களான ஐயனார், காளி போன்ற தெய்வங்களுக்கான ஆலயங்கள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்தவகையில் கல்வத்தை சிவன்கோயிலின் பழமையான கலை மரபு, கட்டிட நிர்மாணமுறை, ஆலய அமைப்பு என்பனவும், இவ்வாலய அமைவிடம் பற்றிய தொல்லியல் இலக்கியச் சான்றுகளும் தென்மராட்சிப் பிரதேசத்தில் முக்கிய தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக கல்வத்தை சிவன் கோயிலினை அடையாளப்படுத்தியுள்ளது.

### 3.4 சாவகச்சேரி வாரிவனேஸ்வரர் ஆலயம்

தென்மராட்சியின் தொல்லியல் மரபுரிமை சின்னங்களில் சாவகச்சேரி வாரிவனேஸ்வரர் ஆலயம் மிக முக்கியம் பெற்றதாகும். தென்மராட்சி வரலாற்றில் இவ்வாலயத்திற்கு முக்கிய பங்குண்டு என்பதனை இலக்கியங்கள், ஜதீகங்கள், வாய்மொழிச் செய்திகள், ஐரோப்பியர் கால ஆவணங்கள் என்பனவற்றுடன், இப்பகுதியில் காணப்படும் கட்டிட அழிபாடுகள், எதிர்பாராத விதமாக வெளிப்படுத்தப்பட்ட விக்கிரகங்கள் மற்றும் நாணயங்கள், மட்பாண்ட எச்சங்கள் என்பன எடுத்துக் காட்டுகின்றன. சாவகச்சேரி அதன் அமைவிடச் சிறப்பு காரணமாகவும் புராதன முக்கிய இடங்களிலொன்றாகியது. குறிப்பாக இதன் ஒரு பக்க எல்லையாக கடற்கரைப் பகுதி அமைந்துள்ளதுடன், கச்சாய், பூநகரி போன்ற புராதன துறைமுகங்களுக்கு மிக கிட்டிய தூரத்திலும்

 ISSN (Print): 2448-9204

அமைந்துள்ளது. இவ்விடங்களில் புராதன குடியிருப்புக்குரிய சான்றுகள் மட்டுமன்றி, ஏழாம், எட்டாம் நூற்றாண்டுக்குரிய அரோபியத், சீனத் தொடர்புகளும், 10 ஆம், 11 ஆம் நூற்றாண்டுக்கான தென்னிந்திய தொடர்புகளுக்குமான சான்றுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இக்காலப் பகுதியினைத் தொடர்ந்து கடற்கரையை அண்டிய துறைமுக நகரங்களில் கோயில்கள் அமைக்கப்பட்டதற்கான போதிய சான்றுகள் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் உண்டு. இதன் பின்னனியிலேயே வாரி – வனேஸ்வரர் என்ற தொன்மை பெயரினுடைய இவ்வாலயம் அமைந்திருக்கும்.

தற்போதைய வாரிவனேஸ்வரர் ஆலயமானது சாவகச்சேரி நகருக்குத் தென்மேற்கு திசையில் பிற்காலத்தில் அமைக்கப்பட்டதாகும். அதாவது போர்த்துக்கேயர் ஆட்சியில் இடம்பெற்ற சுதேசிகளுக்கு எதிரான மதஒடுக்கு நடவடிக்கையின் போது சாவகச்சேரியின் தற்போதைய நகரப்பகுதியில் அமைந்திருந்த தொன்மையான ஆலயமும் அழிக்கப்பட்டபோது, அவ்வாலயத்தின் விக்கிரகங்கள் சிதைவடைவதனை தடுக்கும் பொருட்டு அவ்வூர் மக்கள் நிலத்தில் புதைத்தும், கிணற்றுள் போட்டும் வைத்தனர். இவ்வாறான நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த தொன்மையான எல்லா ஆலயங்கள் பொறுத்தும் பொருந்தக் கூடியதாகும். குறிப்பாக 1619 காலப் பகுதியில் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சிறிதும், பெரிதுமான 500 ஆலயங்களை இடித்து கிறிஸ்தவ தேவாலயங்களை கட்டினர் என வரலாற்று ஆதாரங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது (குணசிங்கம், 2008). இவ்வாறு நீண்ட காலம் புதைக்கப்பட்ட நிலையிலிருந்த விக்கிரகங்கள் சிலவற்றை அடியவர் ஒருவர் வெளியே எடுத்து தற்போதைய ஆலயம் அமைந்துள்ள பகுதியில் கொட்டில் ஒன்றை அமைத்து வழிபடப்பட்டதாகவும், அவரது பரம்பரையினரே காலத்துக்கு காலம் அவ்வாலயத்தினை வளர்தெடுத்து தற்போதைய நிலைக்கு கொண்டுவந்திருந்தனர் எனவும் அறியமுடிகின்றது. எனினும் தொன்மையான வாரிவனேஸ்வரர் ஆலயமானது தற்போதைய சாவகச்சேரி நகரப் பகுதியில் குறிப்பாக சந்தை மற்றும் பஸ்தரிப்பிடம் உள்ள பகுதியில் அமைந்திருந்தமைக்கான ஆதாரங்களுண்டு. குறிப்பாக இப்பகுதியில் கிடைக்கப்பெற்ற இந்து விக்கிரகங்கள் பழமையான ஆலயத்தின் அமைவிடத்தினை அடையாளப்படுத்த உதவியிருந்தது. புராதன வாரிவனேஸ்வரர் ஆலயத்தின் தோற்றம் பற்றி அறிந்து கொள்வதற்கு போதிய சான்றாதாரங்கள் கிடைக்கப்பெறாத நிலையில் இங்கு கிடைக்கப்பெற்ற விக்கிரகங்களைக் கொண்டே இவ்வாலயத்தின் தொன்மையினை ஒரளவு கணிப்பிடமுடிகின்றது. இவ்விக்கிரகங்களின் கலைமரபு பற்றிய ஆய்வினை தென்னிந்திய கலை வரலாற்று ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொண்ட பேராசிரியர் புஸ்பரட்ணம் அதனூடாக இவ்வாலயத்தின் காலத்தினை கி.பி 11 - 13 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதென அதாவது பிற்பட்ட சோழர் அல்லது முற்பட்ட பாண்டியர் காலத்துக்குரியதெனக் கணித்துள்ளார் (புஸ்பரட்ணம், 2017).


ISSN (Print): 2448-9204

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியமான தக்ஷிணகைலாசபுராணத்தில் வரும் வாரிவனேஸ்வரர் ஆலயத்தின் தோற்றமானது நல்லூர் இராசதானி மன்னர் காலத்திற்கு முற்பட்டதாக இருப்பினும் போர்த்துக்கேயர் கால கலை அழிவு நடவடிக்கையில் இவ்வாலயமும் அழிக்கப்பட்டிருக்கலாம், அதன் எச்சங்களாகவே விக்கிரங்கள், முருகைக் கற்கள், செங்கட்டிகள் என்பவற்றிலான கட்டிட எச்சங்களினையும் சாவகச்சேரி பஸ்தரிப்பு மையம், நீதி மன்றப்பகுதி, சந்தையை அண்டிய பகுதிகளில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பழமையான சிவன் ஆலயத்திற்குரியதாக அடையாளப்படுத்தப்பட்ட விக்கிரகங்கள் சாவகச்சேரியின் தற்போதைய சந்தைப்பகுதி மற்றும் நகரப் பகுதிகளினை அண்டியதாக கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றில் ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம், அம்மன் விக்கிரகம், மனோன்மணி அம்மன் விக்கிரகம், சூரியனுக்குரிய விக்கிரகம் என்பன தற்போதும் புதிய ஆலயத்தில் வழிபாடப்படுவதனையும், நாக விக்கிரகம் அண்மையில் உள்ள ஆலயத்திலுள்ளதனையும் மேலும் பனிரென்டு விக்கிரகங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக அருங்காட்சியகத்திலுள்ளது.

வாரிவனேஸ்வரர் ஆலயத்தின் பின்புறமுள்ள இத்திமர வழிபாட்டிடம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவ்இத்திமர வழிபாட்டிடத்தினை அடுத்து இவ்வாலய தீர்த்தமான பதும தீர்த்தம் என அழைக்கப்படும் தாமரைத் தாடகம் அமைந்துள்ளது. இதிலிருந்து எடுக்கப்பட்ட விக்கிரகங்கள் பல தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. வேறும் சில விக்கிரகங்களினை கோடை காலத்தில் நீர் வற்றிய பின் அவதானிக்க முடிவதாகவும் இவ்வாலய பூசகர்கள் தெரிவிக்கின்றனர். இம்மரத்தின் காலம் எதுவென அறியமுடியாத நிலையில் மிகப் பழமையானதாக காணப்படுகின்றது. இவ்மரத்தின் கீழ் ஆலயத்தின் பழைய விக்கிரகங்கள் மற்றும் காலத்திற்கு காலம் சாவகச்சேரியின் நகரப்பகுதியில் கிடைக்கப் பெற்ற விக்கிரகங்கள் என்பவை வைத்து வழிபடப்பட்டு வருகின்றது. ஆலய பூசையின் போது முதலில் இத்திமர வழிபாட்டிடத்திற்கே பூசை இடம்பெறுகின்றது. தென்னாசியாவின் தொன்மையான வழிபாட்டு நெறிகளாகிய மர வழிபாடு மற்றும் நாக பாம்பு வழிபாடு ஆகியன இங்கு இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வாரிவனேஸ்வரர் ஆலயம் பற்றிய வரலாற்றுக் கதைகள் தற்போது வரை மக்களிடையே தொடர்ந்து வருவதனையும் காணமுடிகின்றது. தற்போதைய நீதிமன்றம் அமைந்த பகுதியில் தொன்மையான இந்துக் கோயில் இருந்தாகவும் ஜரோப்பியரின் கலையழிவு நடவடிக்கையினால் அக்கோயில் அழிக்கப்பட்டு, கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்டதாகவும் பின்னர் மக்களின் எதிர்ப்பு காரணமாக, அத்தேவாலயமும் இடிக்கப்பட்டு வேறொரு இடத்தில் கட்டப்பட்டதாகவும் அறியமுடிகின்றது. மேலும்


ISSN (Print): 2448-9204

தற்போதைய பஸ்தரிப்பிடத்திலுள்ள பழைய கிணறு தென்மையான ஆலயத்தின் திருமஞ்சனக் கிணறாகவே நோக்கப்படுகின்றது. யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாண வைபவமாலை போன்ற இலக்கியங்களில் போர்த்துக்கேயர் காலத்தில் சாவகச்சேரியில் இருந்த வாரிவனேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமை பற்றிய செய்திகளுண்டு. தஷிணகைலாய புராணத்தின் பதிநான்காவது அத்தியாயத்தில் உள்ள 'வாரிவனலிங்க மகிமை உரைத்த படலம்' என்னும் பகுதியில் சாவகச்சேரி வாரிவனேஸ்வர ஆலயம் பற்றியும், இயற்கையாக தோன்றிய அங்குள்ள சுயம்பு லிங்கம் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது (ஸ்ரீ தட்சண கைலாச புராணம், பதிப்பு 1916). இவ்விலக்கியத்தில் வாரிவனேஸ்வரர் பற்றிய புராணக் கதையில் இவ்வாலயம் சோழர்கால வரலாற்றுடன் தொடர்பு படுத்திக் கூறப்பட்டுள்ளது. அதாவது சோழநாட்டில் இருந்து வந்த விருபாக்கன் என்பவனுக்கு சுயம்பு லிங்கத்தின் தரிசனம் கிட்டுதல், வாரிவனலிங்கம் மழைவெள்ளத்தில் மறைந்தமை, வைரவ சூலம் வெள்ளம் வற்றச் செய்தமை, விருபாக்கன் வாரிவனேஸ்வர லிங்கத்திற்கு பாலபிஷேகம் செய்தமை, விருபக்கனுக்கு வைரவர் வரம் கொடுத்தமை, விருபாக்கன் முத்தி பெற்றமை போன்ற வரலாற்றுக் கதைகளினைக் குறிப்பிடலாம்.

### 3.5 கண்ணகி வழிபாட்டு மரபிலான ஆலயங்கள்

வரலாற்றுக் கதைகளினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் கண்ணகி வழிபாடு சிறப்புற்ற தன்மையினைக் காணமுடிகின்றது. இராஜவளிய போன்ற சிங்கள இலக்கியங்கள் ஈழத்தில் பத்தினித் தெய்வமாகிய கண்ணகி வழிபாட்டினை முதலாம் கஜபாகு மன்னனே பரப்பினான் எனவும், சிங்கள மக்கள் மத்தியில் இன்றும் பத்தினித் தெய்யோ என்ற பெயரில் கண்ணகி வழிபாடு தொடர்வதாகவும் அறியமுடிகின்றது. கண்ணகி விழாவிற் கலந்து கொண்ட கஜபாகு மன்னன் அவ்விழா முடிந்ததும் வடபகுதியூடாக கண்ணகியின் காற்சிலம்போடு அநுராதபுரத்தை அடைந்ததாகக் அறியப்படுகின்றது. ஈழத்தில் கண்ணகி வழிபாட்டினை வளர்க்க விரும்பிய கஜபாகு மன்னன் கந்தரோடையில் (மாகியப்பிட்டி) உள்ள அங்கணாமைக் கடவையில் கண்ணகிக்கு கோயிலொன்றை அமைத்ததாகவும் அறியமுடிகின்றது. இந்நிகழ்ச்சியினை நினைவுபடுத்தும் முகமாக இவ்வாலயத்திற்கு முன்னர் கஜபாகுவின் சிலை வைக்கப்பட்டிருந்த செய்தியினை இராசநாயக முதலியார் தனது வரலாற்று நூலில் குறிப்பிட்டிருந்தார் (Rasanayagam, 1926). மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அனலைதீவு, நயினதீவு, கரம்பன், புங்குடுதீவு, வேலணை, கட்டுடை (சீரணி), உடுவில், ஊரொழு, மாவிட்டபுரம், அம்பாவளை, துவளி, பாணாவெட்டி, வேம்பிராய், நூணாவில், மட்டுவில், சுட்டிபுரம், போக்கட்டி, கச்சாய், பொறிக்கடவை, மிருசுவில், கரம்பகம், நாகர்கோயில் ஆகிய பல இடங்களில் கண்ணகி மரபிலான ஆலயங்களுண்டு. இந்தவகையில் இலங்கையில் கண்ணகி வழிபாட்டு மரபில் உதித்த ஆலயங்களில் சிறப்பு பெற்ற ஆலயங்களில் ஒன்று மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் மற்றும் சிட்டிவேரம் (சுட்டிபுரம்)


ISSN (Print): 2448-9204

அம்மன் ஆலயம் ஆலயங்களாகும். இலங்கையில் வழக்கிலுள்ள கண்ணகி கதைகளின் படி, மதுரையை எரித்த கண்ணகி கோபம் தணியாதவளாய் இலங்கைக்கு வந்து பத்து இடங்களில் தங்கியிருந்தாகவும், முதலில் கந்தரோடையிலுள்ள அங்கணக்கடவையிலும், மானிப்பாய் கட்டுடை, மட்டுவில் (பன்றித்தலைச்சி 3வது இடம்), இலஞ்சியாரணம்பதி கண்ணகை கோவில் (சோலையம்மன்), ஐந்தாவதாக வரணி சிட்டிவேரத்திலும், கச்சாய், மிருசுவில் எனத் தொடர்ந்து இறுதியில் பத்தாவதாக முல்லைத்தீவில் வற்றாப்பளையில் உறைந்ததாகவும் பத்தாம்பளை என்பது மருவி வற்றாப்பளையாகியதாகவும் கூறப்படுகின்றது. இச்செய்தியில் முன்பு கூறப்பட்ட கஜபாகு வரலாற்றில் இந்தியாவிலிருந்து கண்ணகி வழிபாடு கொண்டு வரப்பட்டதாக அறியக்கிடப்பினும், இவ்வரலாற்றுக் கதையானது பத்தினித் தெய்வமான கண்ணகி மதுரையிலிருந்து இலங்கைக்கு வந்ததாக அறியமுடிகின்றது.

## 4. ஐரோப்பியர் கால மரபுரிமைகள்

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் எனத் தொடர்ச்சியாக ஐரோப்பியரது ஆட்சி இடம்பெற்றபோது, தென்மராட்சிப் பிரதேசத்திலும் பலவகையிலும் அவர்களுடைய அரசியல், பொருளாதார, சமய பண்பாட்டுத் தாக்கங்கள் ஏற்பட்டிருந்தது. அதிலும் குறிப்பாக இந்து ஆலயங்கள் பல அழிக்கப்பட்டு தேவாலயங்கள் அமைக்கப்பட்டிருந்ததற்கான ஆதாரங்களினை காணலாம். உதாரணமாக சாவகச்சேரியின் தொன்மையான வாரிவனேஸ்வரர் ஆலயம் இடிக்கப்பட்டிருந்ததனை அப்பகுதியில் கண்டுபிடிப்பட்ட ஆலய எச்சங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் காணப்படும் தொன்மையான கோட்டைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், வீதிகள், பாடசாலைகள், நாணயங்கள் போன்றன ஐரோப்பியர் ஆட்சியினை இன்று வரை பிரதிபலிக்கும் சின்னங்களாகும். தென்மராட்சியில் வரணி, கச்சாய், சாவகச்சேரி, மிருசுவில், கொடிகாமம், உசன், நாவற்குழி போன்ற கடல்வழி, தரைவழிப் வர்த்தகப் போக்குவரத்திற்கு சாதகமான இடங்களில் தேவாலயங்கள் அமைக்கப்பட்டிருப்பதனையும், இப்பகுதிகளினை அண்டிய பகுதிகளில் பெரும்பாலும் கிறிஸ்தவ மக்கள் வாழ்வதனையும் அவதானிக்க முடிகின்றது. இந்தவகையில் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள தேவாலயங்களாக பின்வருவனவற்றை அடையாளங்காண முடிகின்றது. இவற்றில் பல பிற்கால கட்டிடக் கலைமரபை உள்வாங்கியிருந்தாலும், இவை ஐரோப்பியர் ஆட்சியினால் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களுக்குரிய அடையாளச் சின்னங்களாக விளங்குவதனால் ஐரோப்பியர் கால மரபுரிமைச் சின்னங்களாக அடையாளப்படுத்தலாம். அவையாவன, வரணி சிட்டிவேரம் ஆலயத்திற்கும் வரணி மகாவித்தியாலயத்திற்கும் இடையில் வீதியோரத்திலுள்ள போர்த்துக்கேயர்கால கட்டிட அழிபாடு, மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயம், சாவகச்சேரி புனித லிகோரியர் ஆலய திருச்சபை, கொடிகாமம் புனித பேதுருவார் ஆலயம், கச்சாய் புனித பேதுருவார் ஆலயம், கச்சாய் காணிக்கை மாதா ஆலயம், சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள லிகோரியார் தேவாலயம், அமெரிக்க மிஷன் கிறிஸ்தவ தேவாலயம் என்பனவாகும்.

 ISSN (Print): 2448-9204

**தென்மராட்சிப் பிரதேசத்தின் மரபுரிமைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

தென்மராட்சியில் முழுமையான மரபுரிமைக் கட்டிட அம்சங்கள், வரலாற்று தொன்மை வாய்ந்த கட்டிடங்கள், கோட்டைகள் எதுவும் பாதுகாக்கப்படாமையால், இப்பிரதேசத்தின் தொன்மையான வரலாற்றினை, பண்பாட்டு அம்சங்களினை, பாரம்பரிய வாழ்வியல் முறைகள் போன்றவற்றை ஆவணப்படுத்தி பாதுகாக்க வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். தென்மராட்சியின் தனித்துவமான பாரம்பரியம் பாதுகாக்கப்படுவதற்கும், எதிர்கால சந்ததியினருக்கு அவற்றை வழங்குவதற்குமான சிறந்த வழிமுறையாக அருங்காட்சியகம் ஒன்று அமைப்பதனையே இங்கு சிறந்த திட்டமிடலாக குறிப்பிடமுடியும். ஏனெனில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகள் மற்றும் காலத்துக்கு காலம் எதிர்பாராத விதமாக வெளிப்படுத்தப்பட்ட தொன்மையான தொல்லியல் மரபுரிமை எச்சங்கள் குறிப்பாக மட்பாண்டங்கள், கட்டிடப்பாகங்கள், ஈமத்தாழி, புராதன கால மத்தியகால நாணயங்கள், சிற்பக்கலைமரபுகள் மேலும் பல பெறுமதி வாய்ந்த தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், அவற்றை முறையாக பாதுகாப்பதற்குரிய வழிவகைகள் எதுவும் இல்லாதிருந்ததனால், தற்போது அவற்றை பற்றி எதுவும் அறியமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இன்றுவரை எஞ்சியிருக்கும் வரலாற்று, தொல்லியல் மூலங்களினையும், பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களினையும் பாதுகாப்பதற்கும், சிறந்த முறையில் வெளிப்படுத்துவதற்குமான ஓர் நிறுவன அமைப்பே அருங்காட்சியகமாகும். அதாவது அருங்காட்சியகம் என்பது கிடைத்தற்கரிய, பயன்பாட்டிலிருந்து அருகிய, அருகிவருகின்ற (அரிய, அருகிய) பொருட்களையும், வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களினையும் தன்னகத்தே சேகரித்து, காட்சிப்படுத்தும் ஓர் கட்டிட அமைப்பாகும். சமுக, பொருளாதார, தொழினுட்ப துறைகளில் விரைவாக ஏற்பட்டு வரும் மாற்றங்களினால் பாரம்பரிய மக்களின் பண்பாட்டு அம்சங்கள் மறைந்து போகும் இந்நாளில் இவற்றை ஓரளவேனும் பாதுகாப்பதில் அருங்காட்சியகங்களுக்கே முக்கிய பங்குண்டு. தொழினுட்பத் துறையில் ஏற்பட்ட அபரித வளர்ச்சி காரணமாக மரபுரிமைப் பாதுகாப்பிலும் சமகால அருங்காட்சியகங்கள் பல்வேறான மேம்படுத்தப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றுவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. அருங்காட்சியகம் இப்பிரதேச மக்களின் ஓய்வுநேரத்தை சிறந்த முறையில் கழித்திட உதவி செய்வதாகவும், பண்பாட்டுக் கல்விக் கூடங்களாகவும், பாரம்பரிய கலைகள், தொழில்நுணுக்கங்கள் பாதுகாக்கப்படும் மையங்களாகாகவும் விளங்கும் வகையிலும், பாரம்பரிய கலைகள், பண்பாடுகள், தொழில்நுணுக்கங்கள் போற்றப்படாவிட்டால் இவை பற்றிய அறிவு அருகிக் கொண்டே சென்று மறைந்து விடுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதால் அருங்காட்சியகங்கள் கலை, கலாசாரத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய மையமாகவும் விளங்கும் என்ற வகையிலும் அருங்காட்சியகங்களின் அமைவானது முக்கியம் பெற்றதாகும்.


ISSN (Print): 2448-9204

மேலும் சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தின் முன்புறமாக A9 வீதியினை நோக்கிய வகையில் புராதன வாரிவணேஸ்வர ஆலய மரபுரிமை நிலையம் ஒன்று, அவ்வாலயத்தின் வரலாற்றுத் தொன்மையினை நினைவுபடுத்தும் வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். யாழ்ப்பாணத்தில் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கலையழிவு நடவடிக்கைகளின் போது வாரிவணேஸ்வர ஆலயம் முற்று முழுதாக அழிக்கப்பட்டிருந்தது. மேலும் தற்போதைய பஸ்தரிப்பிடத்தில் உள்ள கிணறு பழமையான ஆலயத்திற்குரிய திருமஞ்சக் கிணறாக தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதன்பின்னனியிலேயே தொன்மையான வாரிவனேஸ்வரர் சிவன் ஆலயம் அமைந்திருந்தமையினை நினைவுபடுத்தும் விதமாக இங்கு வாரிவனேஸ்வர ஆலய மரபுரிமை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொல்லியல் சட்டத்தின் பிரகாரம் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் வரலாற்றுப் பெறுமதியுயை காணிகள், கட்டடங்கள், மரங்கள் போன்றயாவற்றையும் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்த முடியும். மேலும் இச்சட்டத்திற்கு அமைய தொன்மையான மரபுரிமைச் சின்னங்கள் காணப்படும் இடத்தில் அரசாங்க கட்டிடங்கள் அமைத்தல் உட்பட எந்தவொரு நடவடிக்கை மேற்கொள்வதும் சட்டத்திற்கு முரணான செயற்படாக அமையும். எனினும் உறுதியான சான்றாதாரங்களின் மூலம் தொன்மையானதொரு ஆலயம் அமைந்துள்ள இடமாக சாவகச்சேரி சந்தையையொட்டிய பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும், அப்பிரதேசத்தினை புனித பூமியாக கருத்தில் கொள்ளாது புதிய பல கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசம் தொன்மையான புனித பூமியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்குமானால், தென்மராட்சிப் பிரதேசத்தின் தொன்மையான வரலாற்றுத்தடம் ஒன்று பாதுகாக்கப்பட்டு, அப்பிரதேசம் தொல்லியல், வரலாற்று, சமய, கலாசார, பொருளாதார பெறுமதி கொண்ட பிரதேசமாக அபிவிருத்தியடைந்திருக்கும். இவ்வாறு தெல்லியல் மரபுரிமை மையம் ஒன்றினை பாதுகாக்க தவறியிருந்தாலும் தற்போது எஞ்சியிருக்கும் மரபுரிமைகளை இப்பிரதேசம் சார்ந்து பாதுகாப்பதற்கான முதல் முயற்ச்சியாக வாரிவனேஸ்வரர் ஆலய மரபுரிமை மையம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இவ்மரபுரிமையம் குறித்த ஆலயத்திற்குரிய நினைவுச் சின்னமாக கருதப்படுவதால், தென்மராட்சிப் பிரதேச மரபுரிமை பாதுகாப்பிற்கும், மரபுரிமை பாதுகாப்பிற்கான விழிப்புணர்வை உருவாக்கும் வகையிலும் பொதுவான ஒரு அருங்காட்சியகம் உருவாக்கப்பட வேண்டும் என்பது காலத்தின் கட்டயமாகும்.


ISSN (Print): 2448-9204

தென்மராட்சிப் பிரதேசத்தின் கலாசார மரபுரிமைகளை பாதுகாப்பதற்காக அரச மட்டத்திலான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும், ஆதரிப்பதும் அவசியமாகும். அரசாங்க நிறுவன அமைப்புக்கள் மற்றும் சமூக, சமய கல்வி சார் அமைப்புக்கள் என்பன மரபுரிமைப் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் வழங்கி, ஒன்றிணைந்து செயற்படக் கூடிய வரையிலான சூழலை உருவாக்குவது முக்கியமானதாகும். பொதுவான நோக்கங்கள், இலக்குகள் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படும் தன்மையினை உருவாக்குதல், கலாசார மரபுரிமைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல், சிறந்த திட்டமிடலின் அடிப்படையில் மரபுரிமை பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள் உருவாக்கப் பணிகளுக்குத் தேவையான மனித, நிதி, தொழினுட்ப வளங்களை பெற்றுக்கொள்ளுதல் என்பன இப்பிரதேசத்திற்குரிய மரபுரிமை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான அடிப்படை அம்சங்களாக அமையும். தென்மராட்சிப் பிரதேசத்தின் கலாசார மரபுரிமைகளை பாதுகாக்கும் முயற்சிகள் தொடர்ச்சியான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் தேவையை வலியுறுத்துகின்றன. கலாசார மரபுரிமைகள் குறித்துள்ள விழிப்புணர்வு மிகவும் குறைந்த நிலையிலும், தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவின் பின்தங்கலும் முக்கிய சவாலாக உள்ளது. மற்றும் தென்மராட்சிப் பிரதேசத்தின் தொன்மையை வெளிகொணரத் தேவையான திட்டமிடப்பட்ட அகழ்வாய்வுகள் மற்றும் ஆய்வுகளும் அவசியமானதாகும்.

யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தின் தொன்ம வரலாறு அதன் அமைவிடம், வரலாற்று, தொல்லியல் சான்றுகளின் பின்னனியில் உறுதிப்படுத்தப்படுகின்றது. கச்சாய், இயற்றாலை போன்ற தொன்மையான மையங்கள் மற்றும் இந்தப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட உரோம, சீன மட்பாண்டங்கள், நாணயங்கள், கட்டிடப் பகுதிக்குரிய பாகங்கள் போன்றவை இப்பிரதேசத்தில் நடைபெற்ற பரந்த பண்பாட்டுச் சுழற்சிகளுக்கும், வரலாற்று வளர்ச்சிக்கும் வலுச்சேர்க்கின்றன. சோழச் சாசனங்களில் இடம்பெறும் இப்பிரதேச குறிப்புகள் தென்மராட்சியின் வரலாற்று முக்கியத்துவத்தை மேலும் வெளிப்படுத்துகின்றன. ஆயினும் தென்மராட்சிப் பிரதேசத்தில் முறையாகத் திட்டமிடப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படாதிருப்பது, அதன் தொன்மை வரலாற்றை முழுமையாக வெளிக்கொணர முடியாததற்கான முக்கிய காரணமாக உள்ளது. இன்னமும் முறையாக ஆவணப்படுத்தப்படாத கலாசார மரபுரிமைச் சின்னங்கள் காலப்போக்கில் அழிவடைந்து வருகின்றன. எனவே, இப்பிரதேசத்திற்குரிய தொல்லியல் சின்னங்களை ஆவணப்படுத்தி, அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் முன்வைத்து, அரச மற்றும் தனியார் துறைகளின் ஒத்துழைப்புடன் செயல்படுவதன் மூலம், தென்மராட்சி பிரதேசத்தின் கலாசார மரபுரிமையினை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்குக் கடத்திச் செல்ல முடியும்.

 ISSN (Print): 2448-9204

## References:

Paranavitana, S. (Ed.). (1960). *History of Ceylon* (Vol. 1, Pt. II). Colombo.

Nilakanta Sastri, K. A. (1958). *The Colas*. Madras.

Ragupathy, P. (1987). *Early settlements in Jaffna: An archaeological survey*. Madras.

Rasanayagam, C. (1926). *Ancient Jaffna*. Madras.

கமலநாதன், சி.கா. (2012). வரணியின் மரபுரிமைகள். வரணி: புராதன குருநாதர் கோயில்.

குணசிங்கம், மு. (2008). *இலங்கையில் தமிழர் ஓர் முழுமையான வரலாறு*. சிட்னி: தென் ஆசியாவில் மையம்.

சதாசிவபண்டாரத்தார், தி. வை. (1954). *பிற்கால சோழர் சரித்திரம்*. சென்னை: அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.

சதாசிவபண்டாரத்தார், தி. வை. (1974). *பிற்கால சோழர் வரலாறு*. சென்னை: அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.

சிற்றம்பலம், சி.க. (1993). யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு. திருநெல்வேலி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

புஸ்பரட்ணம், ப. (2012). தென்மராட்சியின் தொன்மையும் பெருமையும் - தொல்லியல் வரலாற்று நோக்கு. யா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி நிறுவுநர் நினைவுப் பேருரை.

புஸ்பரட்ணம், ப. (2004). தென்மராட்சியில் சங்ககால நடுகல் வழிபாடு. யா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்புமலர்.

புஸ்பரட்ணம், ப. (2011). 12 ஆம் 13ஆம் நூற்றாண்டுக்குரிய சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வத்தைச் சிவன் கோவில். *கலைக்கேசரி*, தொகுதி – 02, இதழ் 10, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன் - பிரைவேட்) லிமிட்டெட், பக்கம் 06 – 09.

புஸ்பரட்ணம், ப. (2017). *இலங்கையில் தமிழர் ஒரு சுருக்க வரலாறு*. சுவிற்சர்லாந்து: தமிழ்க் கல்விச் சேவை.

ஸ்ரீ தட்சண கைலாச புராணம், பதிப்பு. (1916). பு.பொ.வைத்திய லிங்க தேசிகர், பருத்தித்துறை.

 ISSN (Print): 2448-9204